அதன் பின் மூன்று பாத்திரங்களில் தண்ணீரும், கள்ளும், பாலும் கொண்டு வரப்பட்டன. நாயகமவர்கள் பாலை மட்டில் எடுத்துக் கொண்டார்கள். ஜிப்ரீல் நீங்கள் சன்மார்க்கத்தைக் கைக் கொண்டீர். தண்ணீரைப் பருகினால் உமது சமூகத்தினர் பாவத்தில் அழிந்து போவார்கள். கல்லைக் குடிப்பின் அவர்கள் மதியற்றமூடர்களா யிடுவார்கள். நிச்சயமாக அதை உமது சமூகத்தினர் மீது ஹராம் விலக்கப்பட்டு போவுமென்றார். நாயகமவர்கள் பாலில் சொர்ப்பமே குடித்திருந்தமையால் ஜிப்ரீல் நீர் பால் முழுவதையும் குடித்து மீதி வைய்யாதிருப்பின் உமது சமூகத்தினரில் எவரேனும் நரகத்தில் பிரவேசிப்பதில்லை எனச் சொன்னவுடன் நாயகமவர்கள் அந்த மீதிப் பாலை திரும்பிக் கேட்ட போது ஜிப்ரீல் அது வெகுதூரம் ஊழ், விதியின் படி கலம் எழுதுகோல் நடந்தேறிவிட்டது. அவனுடைய கற்பனை மாற்றப்படுவதில்லை அவனுடைய தீர்ப்பை மறுப்பான் யாருமில்லை என்று சொல்லிவிட்டார்.

பின்பு சில ஜனங்களைக் கண்டார்கள். அவர்கள் ஒரே நாளில் பயிர் விதைத்து கொய்தெடுக்கின்றனர். அவர்கள் அல்லாஹ்வுடைய பாதையில் பீஸபீல் மதப்போர் நடத்தியவர்களென சொல்லப்பட்டது. இன்னும் சில ஜனங்களிடம் சென்றார்கள். அவர்கள் தங்கள் தலைகளை கற்பாறைகளால் தாக்கியுடைத்துக் கொள்கின்றனர். அவர்கள் தொழாதிருந்தோர்களெனப்பட்டது. இன்னும் சிலபேர் தங்கள் முற்புறம் பிற்புறங்களில் அண்டைகள் சேர்க்கப்பட்டு ஜக்கூமென்னும் நரகத்தின் கொடிய நஞ்சையுடைய களிமரங்களில் துஷ்ட மிருகங்களை போல் மேய்ந்திருக்கிறார்கள். அவர்கள் ஸதக்கா, ஜகாத்து தான தருமம் செய்யாத கஞ்சர்களாகும்.

இன்னும் சிலர் ஜினா விபச்சாரம் செய்யும் பேர்வழிகளை அடுத்தார்கள். அவர்கள் பக்கத்தில் நல்ல இறைச்சிகளும், கெட்ட இறைச்சிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் நல்லதை விடுத்து, கெட்டதைப் புசிக்கின்றனர்.

இன்னுமொரு வெட்ட வெளியில் ஒரு ஜனக்கும்பலை நெருங்கினார்கள். அவர்கள் ஒரு மாட்டை அறுத்து நாலாக பங்கிட்டு யஹூதிகள் அதன் கொம்பு, குளம்புகளையும், நஸாராக்கள் நரம்பு சவ்வுகளையும், மஜூஸிகள் இரத்தம் மலங்களையும் முஸ்லிமானவர்கள் அதன் இறைச்சி, பால்களையும் எடுக்கின்றனர். இன்னும் சிலர் தங்கள் உதடுகள், நாவுகளை இரும்பு, கத்திரிக்கோல்களால் தரிக்கின்றனர். அவர்கள் தாங்கள் நல் அமல் செய்யாமல் மற்றவர்களுக்கு உபதேசிக்கும் கதீபு பிரசங்கிகளாம்.

பின்போர் பெண்ணானவள் தன் மார்பைக் கொழுகப்பட்டவளாய் அவளுக்கு கீழால் நெருப்பெறிக்கப்பட்டு தன் உடலின் இறைச்சியை தானேதின்னும் படிக் கண்டார்கள். அவள் தனது கணவனல்லாதவனுக்கு மினுக்கி சிங்காரித்திருந்தவளாம். இன்னுமொரு ஓடையில் இனிய ஒரு குரலினோசையும், மணமான வாடையும், பொருந்திய குளிர்ந்த காற்றையும் அவை சுவர்க்கத்தின் வாடையும், இராகமுமாயிருக்கும் சுவர்க்கமானது எனது ஆண்டவனே ! நீ எனக்கு செய்த நல்வாக்கைத் தந்தருள். எனக்குரிய மணமாளிகைகளும், ஆடையாபரணாதிகளும், நவரத்தினாதி முதலிய சகல சௌபாக்கியங்களும் அதி விமர்ஷையாயிருக்கின்றன. எனது குடிப்பு, ஊன்கள், தீன், பால் முதலிய மதுப்பானங்கள், கனிவர்க்கங்களும் வெகு நேர்த்தியாய் இருக்கின்றனவென்று சொன்ன போது முஸ்லிமானவர்கள் முஃமினானவர்கள், சாலிஹான நல்லடியார் முதலிய, அல்லாஹ் தஆலாவுக்கு இணை வைய்யாதவர்களெல்லோரும் உனக்குண்டாயிருக்கிறார்களெனச் சொல்லப் பட்டது.

இன்னுமொரு ஓடையில் வெறுக்கத்தக்க துர்நாற்றத்தையும், அறுவறுக்கப்பட்ட ஊளை சப்தத்தையும் கேட்டார்கள். அவை ஜஹன்னமெனும் நரகத்தின் அவலட்சணமாகும். நரகமானது எனது



நாயனே ! நீ எனக்கு வார்த்தைப்பாடு செய்ததை தந்தருள். என்னுடைய கொடிய நெருப்பு, சங்கிலிகள் முதலிய அரிகண்டங்களும், கடின நஞ்சையுடைய பாம்பு, தேள் நட்டுவாக் கள்ளிகளும் அதிகரித்திருக்கின்றன. நெருப்பும், ஜுவாலையும் சூடும், பலாமுஸீபத்து, கெட்ட சோதனைகளும் கனகுரூரமாயிருக்கின்றன எனச் சொல்லவே எல்லா காபிர், முஷ்ரிக், யஹூதி, நஸாரா, மஜூஸ் முதலிய அல்லாஹ் தஆலாவுக்கு இணை வைத்தவர்களும், கேள்விக் கணக்கு நாளைக் கொண்டு நம்பிக்கைக் கொள்ளாதவர்களுமான ஆண், பெண், யாவரும் உனக்குண்டெனச் சொல்லப்பட்டது. பின்பு சில ஜனங்கள் இரும்பினாலாகிய தங்கள் நகங்களால் முகங்களையும் நெஞ்சுகளையும் பரண்டுகிறார்கள். அவர்கள் புறம், பேசி மனிதர்களின் மானம், குறைகளை பங்கப்படுத்தி, கீறி கிழிப்பவர்களாம் பின்பு தஜ்ஜாலை அவனுடைய வழிக்கேட்டிலும், அழிச்சாட்டியத்திலும் கெட்ட துஷ்ட நிஷ்டோரங்கள் பேரிலும் கண்டார்கள். அல்லாஹ்தஆலா, அவனுடைய பித்னா, பஸாது தீய, மோச, நாசங்களை விட்டும் நம்மை காத்தருள்வானாக ! ஆமீன்.

١ اَلَا نَحْمَدُ اللّٰهَ مَوْلَى الْجَلِيْلْ ، عَلٰى جُوْدِ اِيْجَادِنَا بِالْجَمِيْلْ
عَلٰى حُسْنِ اِحْسَانِ خَيْرٍ جَزِيْلْ ، خُصُوْصًا بِاِرْسَالِ خَيْرِ الرَّسُوْلْ

٢ نَبِيٌّ كَرِيْمٌ حَلِيْفُ الْوَفَا ، شَرِيْفٌ ظَرِيْفٌ نَظِيْفُ الصَّفَا
رَءُوْفٌ رَحِيْمٌ بِنَا مُسْعِفَا ، كَفَانَا شَفِيْعًا بِخَيْرِ الرَّسُوْلْ

٣ حَبِيْبٌ وَّمَحْبُوْبُ مَنْ قَدْ عَلَا ، حَسِيْبٌ نَسِيْبٌ نَجِيْبُ الْعُلٰى
صَبِيْحُ الْمُحَيَّا مَلِيْحُ الْحُلَا ، فَيَا حُسْنَ اَلْطَافِ خَيْرِ الرَّسُوْلْ

٤ سِرَاجٌ مُّنِيْرٌ سَمِيُّ السُّمَا ، حَمِيْدُ السَّجَايَا مَجِيْدٌ سَمَا
سَمَاءً سَمَاءً لِّمَنْ قَدْ سَمَا ، فَنِعْمَ الْمُسَمّٰى بِخَيْرِ الرَّسُوْلْ

٥ هُوَ الْمُصْطَفَى الْمُرْتَضَى الْمُجْتَبٰى ، هُوَ الْمُقْتَفَى الْمُنْتَقٰى مَطْلَبَا
هُوَ الْمُقْتَدٰى مَنْ هَدٰى مَذْهَبَا ، فَيَا حَبَّذَا دِيْنُ خَيْرِ الرَّسُوْلْ

٦ هُوَ الرَّحْمَةُ اللَّتْ لَنَا اُرْسِلَتْ ، مِنَ اللّٰهِ فِيْ اٰيَةٍ اُنْزِلَتْ
وَذَا نِعْمَةُ اللّٰهِ فِيْنَا جَلَتْ ، فَشُكْرًا لِاِنْعَامِ خَيْرِ الرَّسُوْلْ

٧ فَكَمْ مُّعْجِزَاتٍ لَّهٗ قَدْ نَمَتْ ، وَعَمَّتْ وَعَنْ حَصْرِهَا قَدْ سَمَتْ
وَكَمْ مِّنْ مَّوَاتٍ لَهٗ كَلَّمَتْ ، وَحَيَّتْ بِدَعْوَاتِ خَيْرِ الرَّسُوْلْ

٨ كَمَا انْشَقَّ بَدْرٌ وَّفَيْضِ النَّمِيْرْ ، وَاِشْبَاعِ جَيْشٍ بِصَاعِ الشَّعِيْرْ



كَذَا سَاجِدًا قَدْ اَتَاهُ الْبَعِيْرْ ، كَظَبْيٍ شَكٰى عِنْدَ خَيْرِ الرَّسُوْلْ

٩ اَمَا ظَلَّلَ الْغَيْمُ مِنْ اَجْلِهٖ ، وَخَرَّتْ لَهُ النُّصُبُ فِيْ رِجْلِهٖ
وَذَلَّتْ اَعَادِيْهِ مِنْ رَمْلِهٖ ، رَمَاهُمْ بِهٖ كَفُّ خَيْرِ الرَّسُوْلْ

١٠ اَلَيْسَ الْحَصٰى سَبَّحَتْ قُرْبَةً ، بِيُمْنَاهُ قَدْ اَفْصَحَتْ غُرْبَةً
اَمِ الْوَحْشُ شَهِدَتْ لَهٗ حِسْبَةً ، وَحَيَّتْ سُجُوْدًا لِخَيْرِ الرَّسُوْلْ

١١ اَلَمْ يُبْرِ سُمًّا بِتِرْيَاقِهٖ ، اَمَا طَبَّ سُقْمًا بِاَرْيَاقِهٖ
وَقَدْ صُبَّ غَيْثٌ بِاِفَاقِهٖ لِجَدْبٍ بِبَرَكَاتِ خَيْرِ الرَّسُوْلْ

١٢ وَكَمْ لِاسْمِهٖ غَاثَةٌ فِي الْخُطُوْبْ ، بِهٖ يُسْتَجَابُ الْمُنَاجِي الْغَرِيْبْ
وَمِنْ وَجْهِهٖ قَدْ كُشِفْنَا الْكُرُوْبْ ، وَنُسْقٰى بِفَيْضَاتِ خَيْرِ الرَّسُوْلْ

١٣ فَهَا اِنَّنِيْ وَاقِفٌ عِنْدَ بَابْ ، فَمَا جَاءَ مَنْ جَاءَهٗ ثُمَّ خَابْ
وَلَوْ كُنْتُ كَلْبًا بِذَاكَ الْجَنَابْ ، سَاَحْظٰى بِمَدْحِيْ لِخَيْرِ الرَّسُوْلْ

١٤ وَاِنِّيْ غُلَامٌ ذَمِيْمٌ ذَلِيْلْ ، وَلَا خَيْرَ عِنْدِيْ وَلَوْ كَالْفَتِيْلْ
وَلٰكِنَّ لِيْ فِيْهِ ظَنٌّ جَمِيْلْ ، لِنَيْلِيْ شَفَاعَةِ خَيْرِ الرَّسُوْلْ

١٥ وَصَلّٰى سَلَامٌ وَّحَيَّا سَلَامْ ، عَلٰى خَيْرِ مِفْتَاحِ دَارِ السَّلَامْ
عَلٰى نُوْرِ مِصْبَاحِ ذَاتِ الظَّلَامْ ، وَمَنْ عِنْدَ حَضْرَتِ خَيْرِ الرَّسُوْلْ

# 8. பைத்தின் உரை

1. மாட்சிமைக்குரிய நாயன் அல்லாஹ்தஆலாவைப் புகழ்வோமாக. அவனது சிருஷ்டிக் கொடையினால் நம்மை அழகாக படைத்ததன் பேரிலும், நமக்கு மிகுதமான நன்கொடை அருளிய அழகின் பேரிலும் சிறப்பாக ஹைறான ரசூல் நாயகத்தை நம்மில் அனுப்பியதற்காகவும் அவனைத் துதிப்போம்.

2. அவர்கள் சங்கை வாய்ந்த நபி, சத்தியவாக்கினர். சிறப்பானவர். வள்ளலானவர், மகாபரிசுத்தவான் தயாள கிருபாகரர், தஞ்சமானவர் நமக்கு சிபாரிசாக ஹைறான ரசூல் நாயகமே போதியவர்.

3. மேலான ஆண்டவனுக்கு நேசர், சிநேகிதர், மிக்க மதிப்பினர். மேல் குலத்தினர், உயர்வமிசத்தினர் திருமுக வடிவினர் ஆபரண அழகினர். ஹைறான ரசூலின் வர்ணிப்புக்களை என்னென்று நாம் கூறி புகழ்வோம்.

4. ஒளிரும் தீபமானவர். திருநாமம் மேலானவர் இயற்கைப் புகழுடையார். தலைமைத் தனமுடையார். ஒவ்வொரு வானிலுமேறி மேலான நாயனின் திருச்சமூகம் சென்றவர். ஹைறான ரசூலென்னும் திருநாமம் தரித்த நாயகமே நல்லவர்.

5. அவரே தெளிவாக்கப் பெற்றவர். பொருந்தப் பெற்றவர் , தெரியப் பெற்றவர், தொடரத் தக்கவர். தேடர்கறிய தூயவர். பின்பற்றத்தக்கவர். சன்மார்க்க முன்னிலையானவர் ஹைறான ரசூலின் மார்க்கமே நன்மார்க்கம்.

6) அல்லாஹ்வின் புறத்தால் திருக்குர்ஆன் ஷரீபில் நமக்காக அனுப்பப் பெற்ற றஹ்மத்தானவர். நம்மில் வெளியான அல்லாஹ் தஆலாவின் நிஃமத்தானவர். ஹைறான ரசூலின் நிஃமத்துக்கு நற்துதிக் கூறுவோமாக !

7) அவர்கட்குரிய அதியற்புதங்கள் எம்மாத்திரமோ வளர்ந்தோங்கி, மட்டுக்கு மேலிட்டுவிட்டன. எத்தனையோ மைய்யித்துக்கள் ஹைறான ரசூலின் துஆவினால் உயிர்த்தெழுந்து தங்களோடு பேசியிருக்கின்றன.

8) சந்திரன் பிளந்தது போன்றும், தண்ணீர் ஒலித்ததுப் போன்றும் பெரும் சேனையை ஒரு நாளிக்கோதுமையினால் பசித்தீர்த்ததுப்



போன்றும் அவ்வாறே ஹைறான ரசூல் நாயகத்திடம் ஒட்டகை சுஜூது செய்தது. முயல் முறையிட்டுக் கொண்டது.

9) அவர்கட்கு, மேகம் நிழலிடவில்லையா? அவர்கள் பாதையில் விக்கிரகம் அடித்து துவிழவில்லையா? ஹைறான ரசூலின் திருக்கரத்தால் எறியப்பட்ட மணலினால் தங்கள் பகைவர் வீழ்ந்து மடியவில்லையா?

10) கல்லானது தங்கள் வலக்கரத்தில் தஸ்பீஹ் செய்து நாகரீகத்துடன் வணக்கமாய் பேசவில்லையா? காட்டு விலங்கினங்கள் நியாயமாய் சாட்சியம் கூறி ஹைறான ரசூலுக்கு ஸுஜூது செய்து ஸலாம் சொல்லவில்லையா?

11) தங்கள் உமிழ்நீரால் நோய்களை சுகப்படுத்தவில்லையா? தங்கள் துஆவென்னும் செந்தூரத்தால் நஞ்சை நீக்கவில்லையா?

இன்னும் ஹைறான ரசூலின் பரக்கத்தால் தங்கள் தேசத்தில் பஞ்சம் நீங்கும் பொருட்டு மழை வருசிக்கப் பட்டது.

12) இன்னும் தங்கள் திருநாமத்திற்கு எம்மாத்திரமோ சங்கடங்களில் இரட்சிப்புண்டாயிற்று. அந்நாமத்தினால் ஏழை, இறப்போருக்கு நல்லுதவி அளிக்கப்பட்டது. தங்கள் திருமுகத்தினால் நம் துன்பங்கள் ஹைறான ரசூலின் பரக்கத்தினால் நீக்கப்பட்டு மழைப் புகட்டப்படுகிறோம்.

14) இதோ திட்டமாக நான் அந்நாயகத்தின் வாயிலில் காத்திருக்கும் அடியேன். அந்த வாயலில் வரத்தக்க எவனும் வந்து வீண் போவதில்லை. அந்த சன்னதியில் நான் ஒரு நாயாயிருப்பினும் ஹைறான ரசூலைப் புகழ்வதால் நற்பேர் அளிக்கப்படுவேன்.

15) திட்டமாக நானோ கேவலம் பழிக்கப்பட்ட ஓர் பயல் ஆர்ப்பளவேனும்? என்னிடம் ஹைருண்டாயிருக்கவில்லை. எனினும் ஹைறான ரசூலின் மன்றாட்டத்தை நான் பெறுவதில் அழகான நம்பிக்கை எனக்குண்டு.

16) இரட்சகனாகிய ஆண்டவன் இரட்சிப்புடைய சுவனப்பதியின் திறவுகோலும், இருளையகளும் பந்தத்தின் ஜோதியொலிகளுமாகிய ஹைறான ரசூல் நாயகர் மீதும் தங்களைச் சார்ந்த சமூகத்தினர் மீதும், நற்கருணை ஈடேற்றம் புரிந்தருள்வானாக.

ثُمَّ مَرَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ حَتّٰى وَصَلَ بَيْتِ
الْمُقَدَّسِ فَاِذَانِ الْمَلٰئِكَةُ الْعِظَامُ، يَتَلَقَّوْنَهُ
بِالْبِشَارَةِ وَالْاِكْرَامِ، وَيَقُوْلُوْنَ السَّلَامُ عَلَيْكَ يَا
اَوَّلُ يَا اٰخِرُ، يَا خَاتِمُ يَا حَاشِرُ، اِنَّكَ اَوَّلُ مَنْ تَنْشَقُّ
عَنْهُ الْاَرْضُ، وَاَوَّلُ شَافِعٍ وَّمُشَفَّعٍ لِّاُمَّتِكَ يَوْمَ
الْحِسَابِ وَالْعَرْضِ، ثُمَّ اَتٰى بَابَ الْمَسْجِدِ الْاَقْصٰى،
وَاَنْزَلَهُ جِبْرِيْلُ عَنِ الْبُرَاقِ، وَرَبَطَهُ بِحَلْقَةِ
الْاِصْطَبْلِ، الَّتِيْ تَرْبُطُ الْاَنْبِيَاءُ مِنْ قَبْلُ، ثُمَّ دَخَلَ
الْمَسْجِدَ فَوَجَدَ صُفَّةً قَدِ امْتَلَأَتْ مِنَ الْمَلٰئِكَةِ
وَالْاَنْبِيَاءِ الْكِرَامِ، وَفِيْهِمْ اِبْرَاهِيْمُ وَمُوْسٰى وَعِيْسٰى
عَلٰى نَبِيِّنَا وَعَلَيْهِمُ السَّلَامُ، فَقَامُوْا وَسَلَّمُوْا عَلَيْهِ،
فَجَمَعَهُمْ جِبْرِيْلُ صُفُوْفًا بَيْنَ يَدَيْهِ، فَصَلّٰى بِهِمْ فِيْ
مِحْرَابِهِ فَقَالَ رَافِعًا يَدَيْهِ، اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ جَعَلَنِيْ
خَيْرَ الْاَنْبِيَاۤءِ مِنْ قَبْلِيْ، وَاُمَّتِيْ خَيْرَ الْاُمَمِ لِاَجْلِيْ،
وَاَرْسَلَنِيْ رَحْمَةً لِّلْعَالَمِيْنَ، وَشَفِيْعًا لِّلْمُذْنِبِيْنَ،



وَاَنْزَلَ عَلَيَّ الْقُرْاٰنَ، وَاٰتَانِيَ الْفُرْقَانَ، وَشَرَحَ صَدْرِيْ
وَوَضَعَ وِزْرِيْ، وَرَفَعَ ذِكْرِيْ، وَسَمَّانِيْ رَءُوْفًا رَّحِيْمًا،
فَقَالَ اِبْرَاهِيْمُ بِهٰذَا فَضَلَكُمْ مُحَمَّدٌ صَلَّى اللهُ عَلَيْهِ
وَسَلَّمَ تَسْلِيْمًا، ثُمَّ اَخَذَ جِبْرِيْلُ بِيَدِهٖ صَلَّى اللهُ عَلَيْهِ
وَسَلَّمَ، وَاِلٰى ظَاهِرِ بَابِ الرَّحْمَةِ تَقَدَّمَ، فَاِذَانِ الْمِعْرَاجُ
قَدْ نُصِبَ مِنْ صَخْرَةِ بَيْتِ الْمُقَدَّسِ اِلَى السَّمَاءِ
الدُّنْيَا، جَاءَ بِهِ الْمَلَكُ اِسْمَاعِيْلُ مِنَ الْجَنَّةِ الْعُلْيَاءِ،
اِحْدٰى شُعْبَتَيْهِ مِنْ يَاقُوْتَةٍ حَمْرَاءَ، وَالْاُخْرٰى مِنْ
زُمُرُّدَةٍ خَضْرَاءَ، مَنْضُوْدٌ مِّنْ دُرَّةٍ بَيْضَاءَ،
اَحْسَنُ مَا خَلَقَهُ اللهُ مِنَ الْاَشْيَاءِ، لَهٗ خَمْسَةٌ
وَّخَمْسُوْنَ مِنَ الدَّرَجَاتِ، كُلُّ مِرْقَاةٍ مَّسِيْرَةُ
اَرْبَعِيْنَ مِنْ سَنَوَاتٍ، وَعَلٰى كُلِّ دَرَجَةٍ زُمْرَةٌ مِّنَ
الْمَلٰئِكَةِ يُهَلِّلُوْنَ اللهَ وَيُسَبِّحُوْنَهٗ بِاَنْوَاعِ اللُّغَاتِ،
فَلَمْ يَزَلْ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَصْعَدُ كُلَّ دَرَجَةٍ
وَّهُمْ رَحَّبُوْهُ وَبَشَّرُوْهُ، وَسَلَّمُوْا عَلَيْهِ وَشَرَّفُوْهُ،

وَرَأَى اِسْمَاعِيْلَ، وَرُقْيَائِيْلَ، وَقَلَائِيْلَ مَعَهُمْ اُلُوْفٌ
مِنَ الْمَلَائِكَةِ لَهُمْ زَجَلٌ بِالتَّقْدِيْسِ وَالتَّهْلِيْلِ وَسَمِعَ
مَلَكًا مِّنْهُمْ يُنَادِيْ يَا غَفَّارَ الذُّنُوْبِ، اِغْفِرْ لِاُمَّةِ مُحَمَّدِنِ
الْحَبِيْبِ، فَقَالَ رَبَّنَا لَا تُؤَاخِذْنَا، اِنْ نَسِيْنَا اَوْ اَخْطَأْنَا،
فَقِيْلَ لِمَنْ هٰذَا الدُّعَاءُ، فَقَالَ لِاُمَّتِيَ الضُّعَفَاءِ وَرَأَى
وَادِيًا مَّمْلُوًّا بِدُخَانٍ فَقِيْلَ ذٰلِكَ سُوْءُ اَفْعَالِهِمْ، وَ
قَبِيْحُ اَعْمَالِهِمْ، فَقَالَ اِلٰهِيْ اعْفُ عَنْهُمْ وَلَا تُوْحِشْ
قَلْبِيْ مِنْهُمْ، فَقِيْلَ قَدْ وَهَبْنَاكَ ثُلُثَهُمْ، قَالَ لَا اَرْضَى
قِيْلَ فَنِصْفَهُمْ قَالَ لَا اَرْضَى بِدُوْنِ الْكُلِّ، قِيْلَ قَدْ
مَنَنَّا عَلَيْكَ كُلَّ اُمَّتِكَ، وَغَفَرْنَا لَهُمْ بِحُرْمَتِكَ،
وَلَارْفَعَنَّ قَدْرَ مَنْ صَلَّى عَلَيْكَ بِبَرَكَتِكَ ٥ اَللّٰهُمَّ
صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ ٥



# 9. ஹிகாயத்தின் வரலாறு

அப்பால் நாயகமவர்கள் பைத்துல் முகத்தஸென்னும் பரிசுத்த பட்டணத்தளவில் போய் சேர்ந்தார்கள். அங்கு கன வலுப்பம் தங்கிய மலாயிகத்து "அமரர்கள்" மிக்க சங்கை மரியாதையும், சோபன வாழ்த்தும் கூறி, குதூகலத்துடன் நபிநாயகமவர்களை சந்தித்து, ஸலாம் சொல்லி "அன்பியா" தீர்க்க தரிசிகளுக்கு முதலும், முடிவுமானவரே "நுபுவ்வத்" எனும் நபித்துவத்தின் முத்திராங்கமானவரே கடைசி காலத்தின் நபியே ! தாங்களே கியாமத் உலக முடிவு நாளில் கப்ரு ஸமாதி பிளந்து வெளிக்கிளம்பு வோரில் முதன்மையானவர்கள். தாங்களே உம்மத் சமூகத்தினரை கேள்வி . கணக்கு நாளில் மன்றாடி இரட்சிப் போரில் முதன்மையானவரென்றார்கள்.

பின்பு பைத்துல் முகத்தஸென்னும் பள்ளியின் வாயலில் வந்ததும் ஜிப்ரீலெனும் தேவர்கோன், புராக் என்னும் வாகனத்திலிருந்து நாயகமவர்களை இறங்கச் செய்து முன்னுள்ள நபிமார்கள்,தங்கள் வாகனங்களைக் கட்டும் பந்தியினோர், வளையத்தில் புராக்கை கட்டி விட்டு, பள்ளிக்குட் பிரவேசித்தார்கள்.

அங்கு தீர்க்கதரிசிகளாலும், அமரர்களாலும் நிரப்பப் பெற்ற ஒரு "ஸுப்பா" தளவரிசையைக் கண்டார்கள். அதில் தீர்க்கதரிசிகளான இப்ராஹீம், மூஸா ஈஸா அலைஹிமிஸ்ஸலாம் அவர்களுமிருந் தார்கள். இவர்கள் எல்லோரும் நாயகமவர்களைக் கண்டதும் எழுந்து "அதபு ஹுர்மத்" ஒழுக்கம் மரியாதையுடன் ஸலாம் சொன்னார்கள். ஜிப்ரீலெனும் தேவர் கோன் அவர்கள் எல்லோரையும் சேகரித்து நாயகம் அவர்களின் முன்னிலையிற் பல வரிசைகளாய் அணிவகுத்து நிற்கச் செய்தார். நபி நாயகம் மிஹ்ராபிலே இமாமென்னும் முன்னிலையில் நின்று தொழுது முடிந்ததும், தங்களின் வரிசையான இரு கரங்களையும் உயர்த்தினவர்களாய் அல்லாஹ் தஆலாவைப் புகழ்ந்து அவன் என்னை முன்னுண்டான நபிமார்களில் நன்மையாக்கினான். என் பொருட்டு எனது சமூகத்தினரை மற்ற சமூகத்தினரில் வரிசையாக்கினான். என்னை உலகத்தாருக்கு கருணையாகவும், பாவிகளுக்காக மன்றாடுபவராகவும், அனுப்பி

வைத்தான். என் பேரில் குர்ஆன் வேதத்தை இறக்கினான். எனது ஹிருதயத்தை விஸ்தீரணமாக்கினான். எனது பாரத்தை இலேசாக்கினான். என்னை திக்ரு ஸ்தோத்திரம் செய்வதை உயர்த்தினான். இன்னும் எனக்கு கருணையுடைய நபியென்றும், கிருபையான ரசூல் என்றும் நாமம் சூட்டினான் என துஆ பிரார்த்தனைச் செய்தார்கள்.

உடனே இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் எழுந்து முஹம்மதானவர் இந்த ஒரு துஆவைக் கொண்டே உங்கள் எல்லோரினும் வரிசைப் பெற்றார் என்றார்கள். பின்பு ஜிப்ரீல், நபியவர்களின் திருக்கரத்தைப் பிடித்து கொண்டு கருணையுடைய வாயலின் வெளிப்புறத்திற்கு முன் வந்தார். அப்பொழுது மிஃராஜ் என்னும் ஏணிப் படியானது "பைத்துல் முகத்தஸின்" பாறைகளிலிருந்து முன் வானம் வரையில் நாட்டப்பட்டிருந்தது. அதை மேலான சுவர்க்கத்திலிருந்து இஸ்மாயீலெனும் மலக்கு கொணர்ந்தார். அதன் இரு பக்கவாட்டுகளில் ஒன்று சிவந்த மாணிக்கத்தாலும், மற்றொன்று பச்சை மரகதத்தாலு மிருந்தன. வெண்மை முத்துக்களாலிழைக்கப்பட்டு அல்லாஹ் தஆலா படைத்த வஸ்த்துக்களிலெல்லாம் மிக அழகியதாயிருந்தது. அதற்கு ஐம்பத்தைந்து படிகளிருந்தன. ஒவ்வொரு படியும் நாற்பது வருடத் தொலைத் தூரமாகும்.

ஒவ்வொரு படியிலும் மகத்தான மலாயிக்குகளினொரு கூட்டத்தினர் இருந்து பற்பல பாஷைகளாலும் அல்லாஹ் தஆலாவை தஸ்பீஹ், தஹ்லீல் பரிசுத்தப்படுத்தி ஸ்தோத்திரம் செய்துக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு படியிலும் நாயகம் ஏறிச் செல்லுகையில் அவர்கள் எல்லோரும் தங்களுக்கு மங்கள வாழ்த்தும், சுபச் சோபனம் கூறி சங்கை மரியாதையுடன் ஸலாமுரைத்தனர். இவ்விடத்தில் இஸ்மாயீல், ருக்யாயீல், கலாயீல் என்னும் அமரர்களைக் கண்டார்கள். அவர்களுடன் பல்லாயிரம் அமரர்கள் தக்தீஸ், தஹ்லீல், பரிசுத்த திரு மந்திரம் கொண்டு அலலாஹ் தஆலாவை துதித்தவர்களாய் ஆர்ப்பரித்து, ஆனந்தக் கூச்சலிட்டார்கள். அவ்வமரர்களிலொருவர் பாவங்களைப் பொறுப்போனே ! முஹம்மது



நபியவர்களின் சமூகத்தினருக்கு பிழைப் பொருத்தருள் என பிரார்த்தித்தவுடன் நாயகம் எங்கள் ஆண்டவனே ! நாங்கள் மறதியாகவோ, பிசகாகவோ, செய்த பாவங்களால் எங்களை குற்றம் பிடியாதேயெனக் கேட்டார்கள். இந்தப் பிரார்த்தனையாருக்கெனக் கேட்கவே எனது சமூகத்தினருக்கென விடையளித்தார்கள்.

இனி இவ்விடத்தில் துர்நாற்றப் புகையினால் நிரப்பப் பெற்ற ஓர் ஓடையைக் கண்டு வினவ அது அவர்களின் தீயச் செய்கைகள் எனப் பட்டது. உடனே எனது நாயனே ! அவர்களைத் தொட்டும் மன்னித்தருள் – அவர்கள் விஷயத்தில் எனது ஹிருதயத்தை பரிதவிக்கச் செய்யாதே எனப் பிரார்த்தித்தார்கள். உடனே ஆண்டவனின் திருச் சமூகத்திலிருந்து உமக்காக அவர்களில், மூன்றிலோர் பாகத்தை நன்கொடை அருளினோம் எனச் சொல்லப்பட்டது. அதற்கு நான் பொருந்தவில்லை என்கவே பாதிப்பேரை தந்தோமெனக் கூறப்பட்டது. அதற்கு நான் முழுப் பெயர்களையுமன்றி சம்மதியேன் எனச் சொன்னவுடன் உம்முடைய சமூகத்தினரெல்லோரையும் உமக்கு தத்தம் பண்ணினோம். உமது மகிமையின் பொருட்டால் அவர்கட்கு பிழைப் பொறுத்தோம் உமது பரக்கத் வரிசையின் பலனாக அவர்களில் உம்மீது ஸலவாத்து சொன்னவரின் தகுதியை உயர்த்தினோமென அல்லாஹ்தஆலா திருவுளம் புரிந்தான். ஆண்டவனே ! அவர்கள் மீது ஸலவாத்தும், ஸலாமும் சொல்வாயாக !

نَشْكُرُ الْقَيُّوْمَ مَنْ جَلَّ ثَنَاهُ ‖ اِذْ هَدَانَا خَيْرَ دِيْنٍ ارْتَضَاهُ
بِالنَّبِيِّ الْخَاتِمِ الَّذِى اصْطَفَاهُ ‖ فَوْقَ كُلِّ الْاَنْبِيَا ثُمَّ اجْتَبَاهُ
قَدْ بَدَا الْاَشْيَا الْبَدِيْعُ بِسَمَاهُ ‖ ثُمَّ اَنْشَا الْخَلْقَ مِنْ نُوْرِ ضِيَاهُ
وَلَقَدْ قَامَ نَبِيًّا فِى ابْتِدَاهُ ‖ وَالصَّفِى لَاطِيْنَهُ اسْتَوٰى وَمَاهُ
وَاَضَاءَ الْعَرْشَ مِنْ نَصْبِ لِوَاهُ ‖ وَالنَّجِى مَاشَمَّ مِنْ فِطْرٍ شَذَاهُ

| | |
|---|---|
| بَلْ وَلَا الرُّسْلُ عَلَوْا مَا قَدْ عَلَاهُ | حَيْثُ كَانَ الْقَابُ قَوْسَيْنِ دُرَاهُ |
| حَيْثُ صَلَّوْا وَالْمَلَائِكُ مِنْ وَرَاهُ | وَاحْتَبَوْا فِي خِدْمَةٍ فَوْقَ سَمَاهُ |
| قَدْ رَأَى الْمَوْلَى رَآهُ وَرَآهُ | جَهْرَةً مِّنْ حَيْثُ مَا رَأَى سِوَاهُ |
| وَأَتَى بِالسَّعْدِ مِنْ نُورِ لِقَاهُ | فَانْجَلَى عَنَّا الشَّقَا قَطْعًا عُرَاهُ |
| وَأَقَامَ الْحَقَّ فِينَا مِنْ هُدَاهُ | فَاسْتَبَانَ الْكُفْرُ عَنْ أُسِّ بِنَاهُ |
| وَجَلَا التَّوْحِيدَ عَنْ كَشْفِ غِطَاهُ | فَاضْمَحَلَّ الشِّرْكُ مِنْ نَزْعِ خِبَاهُ |
| فَلَكَمْ حُجَّاتِهِ قَهَرَتْ عِدَاهُ | مُدْحِضَاتِ الْخَصْمِ عَنْ شَرِّ اعْتِدَاهُ |
| يَا رَسُولَ اللهِ يَا مَنْ قَدْ حَبَاهُ | رَبُّهُ مِنْ قُدْرَةٍ مَّا ذَا يَشَاهُ |
| هَلْ لَكُمْ أَنْ تُنْجِدُوا عَبْدًا تَمَنَّاهُ | أَوْ تُمِدُّوهُ لِعَفْوٍ عَنْ خَطَاهُ |
| وَعَلَيْكَ اللهُ صَلَّى فِي مَلَاهُ | مَا تَجَلَّى نُورُكُمْ فِيمَا بَرَاهُ |

## 10. பைத்தின் உரை

1) என்றும் தரிபாடான நற்புகழுடைய நாயனை துதிப்போமாக ! அவன் பொருந்தத்தக்க நன்மார்க்கத்தில் நம்மை நேர்வழிக் காட்டினான்.

2) எல்லா நபிமாரினும் தெளித்து, வடித்து, திருமணியாக்கப் பட்ட முத்திராங்கமான நபியை நமக்கருளினான்.

3) அற்புதமுடைய நாயன் சகல வஸ்துக்களையும் அவர்களின் திருநாமத்தினால் அமைக்கத் தொடங்கி அவர்களின் பிரகாச ஒளியினால் படைப்புக்களை படைத்தான்.

4) ஆதமானவர் தமது களிமண்ணையும், தண்ணீரையும் பூர்த்தி



செய்யாதிருந்த துவக்கத்திலேயே தாங்கள் நபியாய் எழுந்தருளினார்கள்.

5) நூஹானவர் தமது சிருஷ்டியின் வாயை முகவாதிருக்கையிலேயே தாங்கள் தங்கள் கொடியை நாட்டுவதால் அர்ஷை பிரகாசிக்கச் செய்தார்கள்.

6) ஆயினும் தங்கள் மிஃராஜ் என்னும் திரு யாத்திரை காப கவ்ஸைன் என்னும் சமீப சமூகமாயிருக்கையிலே தாங்களேறிய உச்சஸ்தானத்திற்கு மற்றும் ரசூல்மார் எவருமே உயர்ந்ததில்லை.

7) அன்பியாக்களும், அமரர்களும் தங்களுக்கு பின்னின்று தொழுது வானலோகத்தில் தங்களின் பணிவிடையில் மும்முரமாக முனைந்திருந்தனர்.

8) நாயகம் ஆண்டவனைக் கண்டார்கள். இன்னும் கண்டார்கள். மேலும் தாங்களன்றி மற்றொருவருமே காணாதிருக்கையில் பிரதியட்சமாக ! அவனை தாங்கள் தரிசித்தார்கள்.

9) தங்கள் திருக்காட்சியின் ஒளியினால் நற்கதி மோட்சத்தை கொணர்ந்ததன் பயனாக துற்கதியானது நம்மை விட்டும் வேறற களைந்துப் போயிற்று.

10) தங்கள் நேர்வழியினால் நம்மில் உண்மையை நிலை நாட்டினார்கள். அதனால் குஃப்ரானது அதன் அஸ்திவாரத்தை விட்டு அகன்றுப் போயிற்று.

11) இன்னும் தவ்ஹீதென்னும் ஏகாந்த உண்மையை அதன் திரையை நீக்கி, பிரகாசிக்கச் செய்தார்கள். எனவே ஷிர்க்கானது அதன் அடிமூலமே சிதைந்து நிர்மூலமாயிற்று.

12) எம்மாத்திரமோ தங்களின் அத்தாட்சிகள் எதிரிகளின் விதண்டா வாதங்களை தகர்த்தெறிந்து பகைவரை அடக்கி மடக்கிவிட்டன.

13) அல்லாஹ்வுடைய ரசூலே ! ஆண்டவன் தங்களுக்கு வேண்டிய அளவு தத்துவத்தை அளித்த நாயகரே !

14) தங்களுக்கு அடியான் ஆசைக்கு உதவி செய்ய மனமுண்டா? அவனது குற்ற மன்னிப்புக்கு ஒத்தாசைப்புரிய சித்தமுண்டா?

15) அல்லாஹ் தஆலா தான் படைத்த வஸ்த்துக்களில் தங்கள் ஒளிவிலங்கும் காலமெல்லாம் அவனுடைய மேலான மலக்குகளின் கூட்டத்துடன் தங்கள் மீது ஸலவாத்து சொல்வானாக.

ثُمَّ قَالَ جِبْرِيْلُ سِرْ يَا مُحَمَّدُ يَا حَبِيْبَ اللّٰهِ يَا اَكْرَمَ
الْخَلْقِ عَلَى اللّٰهِ، فَسَارَ حَتّٰى اَنْتَهٰى اِلَى السَّمَاءِ الدُّنْيَا
فَتَقَدَّمَ جِبْرِيْلُ الْبَابَ، فَقَرَعَهٗ فَقِيْلَ مَنْ لَدَى الْاَعْتَابِ
قَالَ اَنَا جِبْرِيْلُ وَهٰذَا مُحَمَّدٌ سَيِّدُ الرُّسُلِ وَالْمَلَاَ الْاَعْلٰى
قِيْلَ مَرْحَبًا بِهٖ اَهْلًا وَّسَهْلًا، وَفُتِحَ الْبَابُ فَدَخَلَ
صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ فَلَقِيَهُ الْمَلَكُ اِسْمَاعِيْلُ، فَسَلَّمَ
عَلَيْهِ فَرَدَّهٗ بِاَحْسَنِ تَبْجِيْلٍ، وَقَالَ الْخَيْرُ فِيْكَ وَفِيْ
اُمَّتِكَ، قَدْ شَرَّفْتَنَا بِخِدْمَتِكَ، وَرَاٰى هُنَاكَ قُبَّةً مِّنْ
دُرَّةٍ بَيْضَاءَ، وَفِيْ دَاخِلِهَا اٰدَمُ وَحَوَّاءُ، وَاِذَا نَظَرَ اِلَى
الْيَمِيْنِ ضَحِكَ بِمَا رَاَى الْجَنَّةَ وَذُرِّيَّتَهٗ فِيْهَا، وَاِذَا نَظَرَ
اِلَى الْيَسَارِ بَكٰى بِمَا رَاَى النَّارَ وَذُرِّيَّتَهٗ فِيْهَا، فَسَلَّمَ
عَلَيْهِ، فَرَدَّ السَّلَامَ وَقَبَّلَهٗ بَيْنَ عَيْنَيْهِ، وَقَالَ مَرْحَبًا
بِالْاِبْنِ الصَّالِحِ، وَالنَّبِيِّ النَّاصِحِ، ثُمَّ سَارَ اِلَى السَّمَاءِ
الثَّانِيَةِ فَاسْتَفْتَحَهَا جِبْرِيْلُ، فَاَقْبَلَ جُرْجَائِيْلُ وَ
رُقْيَائِيْلُ، فِيْ اَلْفِ مَوْكِبٍ مِّنَ الْمَلَائِكَةِ وَتَلَقَّوْهُ



بِالتَّشْرِيْفِ وَالتَّبْجِيْلِ، فَرَاَى يَحْيٰى وَعِيْسٰى عَلَيْهِمَا
السَّلَامُ، فَسَلَّمَ عَلَيْهِمَا فَرَدَّا عَلَيْهِ وَدَعَوَا لَهٗ بِالْخَيْرِ
وَالْاِنْعَامِ، ثُمَّ سَارَ اِلَى السَّمَاءِ الثَّالِثَةِ فَرَاَى يُوْسُفَ
وَيَعْقُوْبَ، وَرَاَى سُلَيْمَانَ وَدَاوُدَ الْمُنِيْبَ، فَسَلَّمَ عَلَيْهِمْ
فَرَدُّوْا عَلَيْهِ بِالتَّبْشِيْرِ وَالتَّرْحِيْبِ، ثُمَّ عَلَا السَّمَاءَ
الرَّابِعَةَ فَرَاَى فِيْهَا اِدْرِيْسَ فَسَلَّمَ عَلَيْهِ فَرَدَّ السَّلَامَ
بِالتَّهْنِئَةِ وَالْاِكْرَامِ، وَرَاَى فِيْهَا مَلَكَ الْمَوْتِ عَلٰى
كُرْسِيٍّ مِّنْ نُوْرٍ، وَحَوْلَهٗ مِنَ الْمَلَائِكَةِ جَمٌّ غَفِيْرٌ،
وَهُوَ يُطِيْلُ النَّظَرَ عَلٰى لَوْحٍ بِيَمِيْنِهٖ بِلَا فُتُوْرٍ، وَعَنْ
يَسَارِهٖ شَجَرَةٌ بِسَعَةِ مَا بَيْنَ الْمَغَارِبِ وَالْمَشَارِقِ
لَهَا اَوْرَاقٌ وَّاَثْمَارٌ عَلٰى عَدَدِ اَرْوَاحِ الْخَلَائِقِ،
مَكْتُوْبٌ فِيْهَا اَسْمَاءُ الْجِنِّ وَالْاَبْشَارِ مَعَ مَا لَهُمْ مِّنَ
الْاَرْزَاقِ وَالْاَنْفَاسِ وَالْاَعْمَارِ، فَسَلَّمَ عَلَيْهِ فَرَدَّ
التَّحِيَّةَ بِغَيْرِ تَبَسُّمٍ وَّلَا سُرُوْرٍ، قَالَ جِبْرِيْلُ هٰكَذَا
خَلَقَهُ اللّٰهُ اِلٰى يَوْمِ النُّشُوْرِ، فَسَاَلَهٗ عَنْ قَبْضِ الْاَرْوَاحِ

فَقَالَ اِذَا اسْتَوْفَى الْعَبْدُ رِزْقَهُ وَاَجَلَهُ اَقْبِضْ رُوْحَهُ
مِنَ الْاَشْبَاحِ، فَاِذَا كَانَتْ رُوْحًا مُّؤْمِنَةً طَيِّبَةً رَفَعْتُهَا
اِلٰى عِلِّيِّيْنَ، وَاِذَا كَانَتْ خَبِيْثَةً عَاصِيَةً اَرْمِيْهَا اِلٰى
سِجِّيْنٍ، **ثُمَّ** عَلَا الْخَامِسَةَ فَرَاٰى هٰرُوْنَ اَبْيَضَ
الرَّاْسِ طَوِيْلَ اللِّحْيَةِ، فَسَلَّمَ عَلَيْهِ فَرَدَّ التَّحِيَّةَ،
وَدَعَالَهُ بِدَعَوَاتٍ هَنِيَّةٍ، **ثُمَّ** ارْتَقٰى اِلَى السَّمَاءِ
السَّادِسَةِ فَرَاٰى فِيْهَا خَلْقًا كَثِيْرًا مِّنَ الْكَرُّوْبِيِّيْنَ
جُنْدَ اللّٰهِ الْاَعْظَمِ، يَبْكُوْنَ وَيَسْتَغْفِرُوْنَ لِاُمَّةِ مُحَمَّدٍ
صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ، وَوَجَدَ هُنَاكَ مُوْسٰى جَالِسًا
عَلٰى كُرْسِيَّةٍ مِّنْ نُّوْرٍ مُّتَّكِاً عَلٰى عَصَاهُ مُتَلَبِّسًا بِاَخْضَرِ
جُبَّتِهِ وَعَبَاهُ، قَدْ خَرَجَ الشَّعْرُ مِنْ رِدَائِهٖ اِلٰى مَا
وَرَاهُ، وَالْمَلٰئِكَةُ يَزُوْرُوْنَهُ وَيَتَبَرَّكُوْنَ بِدُعَاهُ فَسَلَّمَ
عَلَيْهِ فَرَدَّ سَلَامَهُ مُنَكِّسًا لِّرَاْسِهٖ، فَقَالَ يَا حَبِيْبِيْ
هَلَّا تَرْفَعُ رَاْسَكَ فَقَامَ بِطِيْبِ نَفْسِهٖ، وَقَالَ يَا مُحَمَّدُ
اَنَا اَسْتَحْيِيْ مِنْكَ، لِاَنَّ الْيَهُوْدَ قَالُوْا اِنِّيْ خَيْرٌ مِّنْكَ



بَلْ اَنْتَ خَيْرٌ مِّنِّيْ وَاَكْرَمُ، وَاُمَّتُكَ خَيْرُ الْاُمَمِ،
**ثُمَّ** عَلَا السَّمَاءَ السَّابِعَةَ فَسَمِعَ الْمَلَكَ الرُّوْحَ وَ
الرُّوْحَانِيِّيْنَ، يَسْتَغْفِرُوْنَ لِاُمَّتِهِ الْمُذْنِبِيْنَ وَرَاٰى
فِيْهَا مِنْ عَجَائِبِ خَلْقِ رَبِّهٖ، مَا لَمْ يُؤْذَنْ اَنْ يُّحَدِّثَكُمْ
بِهٖ، ثُمَّ وَجَدَ فِيْهَا بَيْتًا مُّرَبَّعًا مِّنَ النُّوْرِ، فَقِيْلَ هُوَ
الْبَيْتُ الْمَعْمُوْرُ، وَتَحُجُّهُ فِيْ كُلِّ يَوْمٍ سَبْعُ مِائَةِ
اَلْفٍ مِّنَ الْمَلٰئِكَةِ وَيَطُوْفُوْنَ، ثُمَّ يَدْخُلُوْنَهُ اِلٰى
يَوْمِ الْقِيٰمَةِ وَلَا يَعُوْدُوْنَ، فَاِذَا كَانَ يَوْمُ الْجُمُعَةِ
يَخْطُبُ فِيْهِ عِيْسٰى عَلَيْهِ السَّلَامُ، وَيَجْتَمِعُ فِيْهِ
الْمَلٰئِكَةُ وَالْاَنْبِيَاءُ وَالرُّسُلُ الْكِرَامُ، وَيُصَلُّوْنَ
وَيَدْعُوْنَ لِاُمَّةِ مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ الَّذِيْنَ
يُقِيْمُوْنَ الْجُمُعَةَ، فِيْ مَسَاجِدِ الْاَرْضِ مِنْ كُلِّ الْبُقْعَةِ
وَرَاٰى فِيْهَا شَيْخًا حَسَنَ الشَّيْبَةِ، عَظِيْمَ الْهَيْبَةِ،
يُشْبِهُ نَفْسَهُ الشَّرِيْفَةَ، جَالِسًا عَلٰى كُرْسِيٍّ مِّنْ نُّوْرٍ
عِنْدَ بَابِ الْجَنَّةِ، وَقَدْ اَسْنَدَ ظَهْرَهُ اِلَى الْبَيْتِ الْمَعْمُوْرِ

وَعَلٰى جَانِبِهٖ جَارِيَةٌ كَالْحُوْرِ، فَاسْتَخْبَرَ عَنْهُمَا
بِالْإِشَارَةِ، فَقِيْلَ هُمَا اِبْرَاهِيْمُ وَزَوْجَتُهٗ سَارَةُ،
فَسَلَّمَ عَلَيْهِمَا فَرَدَّا السَّلَامَ، وَقَالَا مَرْحَبًا بِالْوَلَدِ
الصَّالِحِ وَالنَّبِيِّ النَّاصِحِ، وَعَانَقَاهُ بِالتَّقْبِيْلِ وَدَعَوَا لَهٗ
بِالْخَيْرِ الْجَزِيْلِ ○ اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ ○

## 11. ஹிகாயத் வரலாறு

பின்பு ஜிப்ரீலானவர் முஹம்மதே ! அல்லாஹ்வின் நண்பரே ! அல்லாஹ் தஆலாவிடத்தில் சிருஷ்டிகளில் மிகச் சங்கை வாய்ந்தவரே ! நடங்களென்றார். நாயகம் முன் வானம் வரையிற் சென்றதும், ஜிப்ரீல் கதவைத் தட்டினார். யாரென சப்தம் வந்தது. நான் ஜிப்ரீல் இதோ ரசூல்மார்களுக்கு நாயகரும், மேலான அமரர்களுக்கு எஜமானருமாகிய முஹம்மதென்றவுடன் அவருக்கே சுபசோபனம். நல்மாராயம் நல்வரவென்ற வாழ்த்துடன் வாயல் திறக்கப்பட்டது.

உட்பிரவேசிக்கவே அங்கு இஸ்மாயீலென்னும் அமரரை சந்தித்து, அவர் மீது ஸலாம் கூறினார்கள். அவர் மரியாதையோடு மறுமொழி கூறி நலவெல்லாம் உம்மிலும், உமது சமூகத்தினரிலுமாகும். தங்கள் பணிவிடையினால் எங்களைச் சிறப்பித்தீர் என்று சொன்னார். அவ்விடத்தில் வெண்மை நிறமுடைய ஆன முத்தாலொரு குப்பா மாளிகை இருந்தது. அதில் ஆதம், ஹவ்வா அலைஹிமஸ்ஸலாம் இருவரும் இருந்தனர். ஆதம் வலது பக்கத்தைப் பார்த்தால் சுவர்க்கத்தையும், அதிலிருக்கும் தமது சந்ததிகளையும் கண்டு சிரிப்பதும், இடது பக்கம் பார்த்தால் நரகத்தையும், அதிலிருக்கும் தமது சந்ததிகளையும் பார்த்து அழுவதுமாயிருக்கிறார்கள். அவர்களிருவர் மீதும் நாயகம் ஸலாமுரைக்க அவர்கள்



மரியாதையுடன் ஜவாபுக் கூறி, தங்களிரு கண்களுக்கு மிடையில் முத்தமிட்டு, எங்கள் அருமை மகனுக்கே சோபனம். நற்குணமான நபிக்கே நன்மாராயம் என வாழ்த்திப் போற்றி, ஆசிர்வதித்தனர்.

பின்பு இரண்டாம் வானம் வரையிற்சென்று ஜிப்ரீல் அதன் வாயிலை திறக்கச் செய்தார். ஜிர்ஜாயில், ருக்யாயீல் என்னும் இரு அமரர்களும் ஆயிரம் சவாரியான அமரர்கள் புடைச் சூழ, வெகு குதூகலத்துடன் அதிக விமர்சையாய் எதிர் கொண்டழைத்தனர். அங்கு யஹ்யா, ஈஸா அலைஹிமஸ்ஸலாமெனும் தீர்க்கதரிசிகள் இருவரையும் தரிசித்து அவர்கள் மீது ஸலாம் சொல்லவே, அவர்கள் வெகுப்பரிவுடன் பதிலுரைத்து, நன்மை, நன்கொடைக் கொண்டு பிரார்த்தித்தனர்.

அப்பால் மூன்றாம் வானம் சென்றதும் யஃகூப், யூசுப் சுலைமான் தாவூது அலைஹிமிஸ்ஸலாமென்னும் தீர்க்கதரிசிகளை கண்டு ஸலாமுரைக்கவே அவர்கள் அன்போடு ஜவாபுரைத்து, சுபசோபனம், நன்மாராயம் கொண்டு ஆசிர்வதித்தனர்கள். பின்பு நான்காம் வானத்திற்குயர்ந்து அங்கு இத்ரீஸ் நபியைக் கண்டு ஸலாம் சொன்னவுடன் அவர்கள் சங்கையுடனும், மங்கள வாழ்த்துடனும், மறுமொழி கூறினார்கள். அவ்விடத்தில் ஒளியினாலொரு நாற்காலி மீது மலக்குல் மௌத்தென்னும் எமனைக் கண்டார்கள். அவரைச் சூழ்ந்து நிறைய மலக்குகள் கும்பலிருந்தனர். அவர் தமது வலக்கையிலிருக்கும் ஓர் பலகையில் ஓயாது நோட்டத்தை செலுத்தினவராயிருக்கிறார். அவரின் இடது பாகத்தில் எழுவான், படுவானை அடைக்கத்தக்க பிரமாண்டமான ஓர் விருட்சமிருக்கிறது. அதற்கு படைப்புகளின் உயிர்களது எண்ணிக்கைப்படி இலைகளும், பழங்களுமுண்டு. அவைகளில் மனு, ஜின்களின் பெயர்கள் எழுதப்பட்டிருப்பதுடன் அவர்களுக்குள்ள இரணங்கள், சுவாசங்கள், ஆயுட்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

அவருக்கு நாயகம் ஸலாம் சொன்ன போது அவர் யாதொரு சந்தோஷமின்றி ஜவாபு சொன்னார். ஜிப்ரீல் அவரை இவ்விதமாகவே கியாமத் உலக முடிவு நாள் பரியந்தம் அல்லாஹ் படைத்திருக்கிறானென்றார். நாயகம் அவரிடம் உயிர்களை

கைப்பற்றும் விதத்தைப் பற்றிக் கேட்டார்கள். அவர் ஒரு அடியான் தன்னுடைய ஆகாரத்தையும், குறிப்பிட்ட தவணையையும், சரிவர பூர்த்தி செய்துக் கொள்வானாயின் அவனுடைய ஜடத்திலிருந்து உயிரைப்பறி வாங்குவேன். அது முஃமின் நல்லடியானின் உயிராயின் அதை "இல்லியீன்" என்னும் சுவர்க்கத்தளவில் உயர்த்துவேன். கெட்ட பாவி உடைய உயிராயின் அதை "சிஜ்ஜீன்" எனும் நரகத்தளவில் எறிந்து விடுவேனென்று சொன்னார்.

பின்பு ஐந்தாம் வானத்திற்கு உயர்ந்து அங்கு ஹாரூன் நபியவர்களை தலை நரைத்த, வெண்மையான நீண்ட தாடியுடையவராய் கண்டு அவருக்கு ஸலாம் சொல்ல அவர் ஜவாபு கூறி, நற்சுக வாழ்வுக் கொண்டு பிரார்த்தித்தார்.

பின்பு ஆறாம் வானம் சென்று அங்கு அல்லாஹ் தஆலாவின் பெரும் சேனைகளான "கர்ரூபிய்யீன்" என்னும் அமரர்களில் அநேகரை தரிசித்தார்கள். அவர்கள் எல்லோரும் நபியவர்களின் சமூகத்தினருக்காக, பிழை பொறுக்கத் தேடினவர்களாய் அழுதுக் கொண்டிருக்கின்றனர். இன்னும் அதில் மூஸா நபியவர்கள் அழகிய சுத்த ஒளியினாலான ஓர் நாற்காலியிலிருக்கக் கண்டார்கள். அவர் பச்சை நிறத்தையுடைய குப்பாயம் போர்வை அணிந்தவராயும் தமது "அஸா" ஊன்று கோலின் பேரிலாகம் பெற்றவராயுமிருந்தார். அவருடைய உரோமங்கள் குப்பாயத்தை தொலைத்து பிற்புறமாய் வெளிப்பட்டிருந்தன. அமரர்கள் அவரை சந்தித்து அவருடைய பிரார்த்தனைக் கொண்டு பரக்கத் வரிசைப் பெற்றுக் கொள்கின்றனர். நாயகம் அவர்மீது ஸலாம் சொல்ல அவர் தலையைக் குனிந்தவராய் ஜவாபுரைத்தார். நாயகம் எனது நண்பரே ! உம்முடைய தலையை உயர்த்தக் கூடாதாவென்ற போது மனமகிழ்ச்சியுடன் முஹம்மதே ! நான் உம்மில் நின்றும் வெட்கிக்கிறேன். ஏனெனில் யஹூதிகள் நான் உங்களை விட சிறந்தவரென சொல்லி விட்டனர். ஆயினும் தாங்களே என்னிலும் சிறந்தவரும், மிகச் சங்கை வாய்ந்தவரும், தங்கள் சமூகத்தினர் அவ்விதமே சிரேஷ்டமானவர்களென்றும் சொன்னார்.

பின்பு ஏழாம் வானத்தில் சென்று அங்கு ரூஹ் ரூஹானிய்யின் என்னும் அமரர்களை சந்தித்தார்கள். அவர்கள் நாயகமவர்களின்



சமூகத்தில் பாவியானவர்களுக்கு பிழை பொறுக்கத் தேடுவதையும் கேட்டார்கள். இன்னுமதில் ஆண்டவனுடைய பற்பல படைப்புக்களின் அற்புதங்களிலும், அதிசயங்களிலும், அவைகளை பிரஸ்தாபிக்க அனுமதிக்கப்படாத, விபரித்துக் கூறமுடியாத, அனந்தங் காரணங்களை கண்ணாறக் கண்டு களிக்கூர்ந்தார்கள். பின்பு அவ்விடத்தில் அந்த ஒளியினால் சதுர வடிவத்தில் பிரகாசிக்கத் தக்க "பைத்துல் மஃமூர்" என்னும் பள்ளியை தரிசித்தார்கள். அதில் ஒவ்வொரு நாளிலும் எழுபதனாயிரம் மலாயிக்கத்துக்கள் ஹஜ் என்னும் வணக்கமும், தவாஃபும் செய்தபின் அதன் உள்ளே புகுவார்கள்.

மறுபடி உலகமுடிவு நாள் பரியந்தம் அவர்கள் திரும்புகிறவர்களல்லர் ஜும்ஆ வெள்ளி கிழமையில் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அதில் குத்பா ஓதி உபதேசம் செய்வார்கள். அமரர்களும், தீர்க்கத்தரிசிகளும் அதிற் சேகரமாய் ஜும்ஆ தொழுத பின் முஹம்மது நபியின் சமூகத்தினரில் பூலோகத்தில் நாலா கோணங்களிலுமுள்ள பள்ளியில் வெள்ளி நாள் தொழுகையை நிலைநாட்டிய நல்லோர்களுக்காக பிரார்த்தனை செய்வார்கள். இன்னுமதில் கவுரவமிக்க தக்க மதிப்பு வாய்ந்த, அழகிய நரை இலங்கிய ஓர் விருத்தாளியை கண்ணுற்றார்கள்.

அவர் தமது சிறப்பான சரீர வடிவத்திற்கப்பானவராய் சுவர்க்கத்தின் வாயிலிடத்தில் ஒளியினால் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து தமது முதுகை பைத்துல் மஃமூர் பள்ளியிற் சேர்த்த வராயிருந்தார். அவர் பக்கத்தில் சுவர்க்க லோகத்தின் கன்னிஸ் திரிக்கொப்பாகிய, சுந்தரவடிவுடைய, ஓர் பெண்ணரசியுமிருந்தார். அவ்விருவரையும் குறித்து விசாரித்ததில் அவர்களுமது பிதா இப்ராஹீமும், அவருடைய ஸ்தீரி சாராவுமெனச் சொல்லப்பட்டது. நாயகம் அவர்கள் மீது ஸலாமுரைக்க அவர்கள் முக மலர்ந்து மகிழ்ச்சியுடன் ஜவாபுக் கூறி, நட்புடைய பிள்ளைக்கே சோபனம். சற்குண நபிக்கே நன்மாராயம் எனச் சொல்லி நாயகமவர்களை மார்போடணைத்து கட்டித் தழுவி, முத்தமிட்டு, மிகுந்த நன்மைக் கொண்டு பிரார்த்தித்து ஆசீர்வதித்தார்கள். ஆண்டவனே ! அவர்கள் மீது ஸலவாத்து, ஸலாம் சொல்வாயாக !

صلى الله على الهادي الأمينا

| | |
|---|---|
| تَعَالَوْا نَتْلُ تَسْلِيمَ التَّحِيَّة | عَلٰى خَيْرِ الْمُحَيَّا بِالتَّحِيَّة |
| وَنُهْدِي مِنْ غَوَالِي تَصْلِيَاتٍ | تُعَطِّرُ خَيْرَ ذَاتِ الْأَحْمَدِيَّة |
| وَنُثْنِي كُلَّ خَيْرٍ فِيهِ جَمْعًا | بِحَسَنَاتِ الدُّنَا وَالْأُخْرَوِيَّة |
| هُوَ النُّورُ الْمُنِيرُ بِنُورِ ذَاتٍ | تُضِيئُ بِهِ السَّمٰوَاتُ الْعَلِيَّة |
| هُوَ الْبَحْرُ الْمُفِيضُ لِكُلِّ عِلْمٍ | فَكُتُبُ اللّٰهِ مِنْهُ غَدَتْ مَلِيَّة |
| لَهُ ذَاتُ الْفَضَائِلِ كُلُّ رُسْلٍ | فَمِنْ فَضَلَاتِهِ حَازُوا الْمَزِيَّة |
| لَهُ أُسُّ الْفَخَارِ وَأَصْلُ مَجْدٍ | فَهُمْ مِنْ سُورِهِ ذَاقُوا شُوَيَّة |
| بِهِ بَاهَى الصَّفِيُّ مِمَّنْ وَرَاهُ | بِهِ فَاقَ الْخَلِيلُ عَلَى الْبَقِيَّة |
| فَهُمْ فِي حَدِّ حِيطَتِهِ بِحُكْمٍ | بِرَعْيِ حُقُوقِهِ عِنْدَ الْقَضِيَّة |
| وَهُمْ فِي فَصِّ خَاتَمِهِ رُقُومٌ | هُوَ الْمَعْنَى الْمُتَمِّمُ الْفَائِدِيَّة |
| فَكَمْ عِزٍّ وَكَمْ شَرَفٍ وَظَرَفٍ | فَخُصَّ بِهِ بِحَيْثُ اللَّامِعِيَّة |
| فَخَلْقُ اللّٰهِ يُحْمٰى فِي حِمَاهُ | وَيُرْعٰى دُونَ رَوْضَتِهِ النَّدِيَّة |
| فَمَنْ يَسْتَنْجِدَنْهُ بِأَيِّ خَطْبٍ | عَلَيْهِ بِهِ فَثَمَّ لَهُ الْعَطِيَّة |
| فَهَا أَنَا مِنْ طُفَيْلِ قِرَاكَ فَامْنُنْ | عَلَيَّ بِصَفْحِ ذَنْبِي وَالْخَطِيَّة |
| عَلَيْكَ صَلٰوةُ رَبِّي مَعْ سَلَامٍ | دَوَامًا فِي الْبُكُورِ وَفِي الْعَشِيَّة |



## 12. பைத்தின் உரை

1. தோழர்களே ! வாருங்கள். நாம் ஸலாம் கொண்டு காணிக்கை அருளப் பெற்ற நாயகரின் திருமுகத்திற்கு காணிக்கையாக ஸலாமை ஓதுவோம்.

2. இன்னும் அஹ்மது நாயகரின் திருமேனியை மன்னிப்பிக்கத்தக்க ஸலவாத்தென்னும் நறுமணங்களை அவர்களுக்கு பரிசளிப்போம்.

3. இன்னும் இகலோக, பரலோக, நல உரிமைகள் முதலிய எல்லா நன்மைகளையும், ஒருங்குத்திரட்டி, அவர்களிலேயே வைத்து புகழ்பாடுவோம்.

4. அவர்கள் தங்கள் திருமேனியின் ஒளியினால் மேலேழுவான்களையும் ஒளிரச் செய்யும் ஒளியானவர்கள்.

5. அவர்கள் சகல கலைக்கியானங்களையும், ஒலிப்பிக்கத் தக்க மகா சமுத்திரம், தங்கள் இல்மு அறிவினால் அல்லாஹ்வின் வேதங்கள் நிரம்பி இருக்கின்றன.

6. சர்வ நல் வரிசைகளின் ஸ்தூலமே அவர்களுக்குரியது. ரசூல்மார் அனைவரும் தங்கள் மீதிலிருந்தே வரிசைப் பெற்றார்கள்.

7. சகல பெருமையின் மூலாதாரமும் கீர்த்தி, கியாதியின் அடிப்படையும் அவர்களுக்கே உரியன மற்றவர்களெல்லாம் தங்கள் எஞ்சியதிலிருந்தே அற்ப சொற்பத்தை அனுபவக்கின்றனர்.

8) இன்னும் அவர்களைக் கொண்டே ஆதமானவர் தமக்கு பின்னோரில் பெருமை பேசினார். இப்ராஹீம் மற்றவர்களில் மேம்பாடு பெற்றார்.

9) அவர்களெல்லோரும் சகல விவகாரங்களிலும் கடமைகளை பேணுவதில் நாயகத்தின் தீர்ப்பின் வரையறைக்கு உட்பட்டவர்களே.

10) இன்னுமவர்கள் நாயகத்தின் முத்திரை. மோதிரத்தில் சித்தரிக்கப்பட்ட அட்சரங்களும் தாங்களே அவற்றின் பயனை பூர்த்தி செய்யத்தக்க உட்பொருளுமாயிருக்கும்.

ثُمَّ رَاٰی مَلَكًا مَّخْلُوْقًا مِّنْ نَارٍ، جَالِسًا عَلٰی كُرْسِيٍّ مِّنْ
شِرَارٍ، فِیْ مَسِیْرَةِ اَلْفِ سَنَةٍ مِّنَ الْبِعَادِ، وَلَهٗ اَعْوَانٌ وَّ
خُدَّامٌ غِلَاظٌ شِدَادٌ فَقِیْلَ هٰذَا مَالِكُ خَازِنُ النَّارِ
فَسَلَّمَ عَلَیْهِ، فَرَدَّ السَّلَامَ وَرَفَعَ رَاْسَهٗ وَنَظَرَ نَظْرَةً
اِلَیْهِ، فَاِذَا هُوَ اَعْظَمُ هَیْبَةً اَكْبَرُ خِلْقَةً، اَشَدُّ بَطْشَةً
عَظِیْمُ الصَّوْلَةِ، ظَاهِرُ الْغَضَبِ، غَلِیْظُ الْقَلْبِ، لَیْسَ
فِیْ قَلْبِهٖ رَحْمَةٌ قَطُّ، لَوْ اَشْرَفَ عَلَی الدُّنْیَا لَحْظَةً
لَهَلَكُوْا بِشِدَّةِ الضَّغْطِ، فَقَالَ جِبْرِیْلُ یَا مَالِكُ لَا
تَنْظُرْ اِلٰی حَبِیْبِ اللّٰهِ، فَوَلّٰی وَجْهَهٗ وَرَاهُ، فَسَاَلَ اَنْ
یُّرِیَهُ النَّارَ، فَقَالَ لَا تَسْتَطِیْعُ النَّظَرَ اِلٰی مَسَاوِیْ
تِلْكَ الدَّارِ، فَاِذَا بِهَاتِفٍ، یَا مَالِكُ اَطِعْ حَبِیْبِیْ وَلَا
تُخَالِفْ، فَكُشِفَ عَنْهُ الْحِجَابُ، فَفُتِحَ مِقْدَارُ خَرْمَةِ
اُبْرَةٍ مِّنَ الْبَابِ، فَخَرَجَ مِنْهَا وَهْجٌ سَاطِعٌ، وَدُخَانٌ
مُّنْتِنٌ قَاطِعٌ، وَفَارَتِ النَّارُ، وَغَلَتْ بِمَسَاوِیْهَا مِنَ
الشَّرَارِ وَالْبَوَارِ، فَاِذَا فِیْهَا سَبْعُ طَبَقَاتٍ بِقَدْرِ



11) எத்தனை, எத்தனையோ சீரும், சிறப்பும், கியாதியும், கௌரவமும், மற்ற எவரேனும் உடந்தையின்றி தங்களுக்கே சொந்தமாக்கப் பட்டிருக்கின்றன.

12) அல்லாஹ் தஆலாவின் சிருஷ்டிகோடிகள் நாயகத்தின் கோட்டைக்குள் காக்கப்படும். தங்கள் நலம் பொருந்திய தோட்டத்தில் மீயக்கப்பட்டும் வருகின்றனர்.

13) எவனாவது, எந்த சங்கடத்திலாவது தங்களின் ஆதரிப்பை நாடினால் அவன் அவர்களையே பற்றிப்பிடித்துக் கொள்ளட்டும். அங்கேயே அவனுக்கு தரும நிவாரணை உபகரிக்கப்படுவான்.

14) நாயகமே ! இதோ தங்களின் அழையா விருந்தினனாகிய ஏழை அடியேன் நான் ஆசையினாலே எனது குற்றம், குறைகளை மன்னிப்பதுக் கொண்டு எனக்கு பிச்சைக் கொடுங்கள்.

15) எனது ஆண்டவனின் நற்கிருபை ஈடேற்றம் தங்கள் மீது சதா காலம் காலையிலும், மாலையிலும் உண்டாகுக !

مَا بَيْنَ الْمَشَارِقِ وَالْمَغَارِبِ، مَحْبُوسٌ فِيهِنَّ
الرِّجَالُ وَالنِّسَاءُ مَعَ الْحَيَّاتِ وَالْعَقَارِبِ، وَهُمْ
يَتَصَارَخُوْنَ مِنْ تِلْكَ الْمَصَائِبِ، فَقَالَ يَا مَالِكُ
مَا كَانَ لَهُمْ مِّنَ الْخَطِيَّةِ فِي حَيٰوتِهِمُ الدُّنْيَوِيَّةِ،
قَالَ كَانُوْا يَظْلِمُوْنَ الْخَلْقَ وَيَأْكُلُوْنَ اَمْوَالَهُمْ
بِغَيْرِ الْحَقِّ، وَنَظَرَ فَإِذَا قَوْمٌ يَبْتَلِعُوْنَ النَّارَ،
فَتَخْرُجُ مِنَ الْاَدْبَارِ، فَقِيْلَ هٰؤُلَاءِ اَكَلَةُ
اَمْوَالِ الْاَيْتَامِ، بِالظُّلْمِ وَالْحَرَامِ، وَقَوْمٌ بُطُوْنُهُمْ
كَالْجِبَالِ الْكِبَارِ، فِيْهَا حَيَّاتٌ وَّعَقَارِبُ مِنَ النَّارِ،
فَهٰؤُلَاءِ اَكَلَةُ الرِّبٰو وَالْاَقْذَارِ، وَوَجَدَ قَوْمًا يَّطْحَنُوْنَ
رُؤُسَهُمْ بِحِجَارَةٍ مِّنْ نَّارٍ، فَهُمْ حُكَّامٌ يَّرْتَشُوْنَ
فِي الْحُكْمِ مِنَ الْاَبْشَارِ، وَقَوْمًا يَّعْطِشُوْنَ اِلَى الْمَاءِ
وَيَسْتَغِيْثُوْنَ، فَتَسْقِيْهِمُ الزَّبَانِيَةُ بِمَاءٍ كَالْمُهْلِ
تَغْلِيْ فِي الْبُطُوْنِ، فَتَسْقُطُ لُحُوْمُ اَوْجُهِهِمْ وَتَقَطَّعُ
اَمْعَاءَهُمْ مِنَ الْحَرِّ، ثُمَّ تَخْرُجُ مِنْ وَّرَاءِ الدُّبُرِ،



فَهٰؤُلَاءِ شَارِبُوا الْخَمْرِ، وَقَوْمًا اَجْسَامُهُمْ وَوُجُوْهُهُمْ
كَالْخَنَازِيْرِ، تَنْهَشُ لُحُوْمَهُمُ الْحَيَّاتُ وَالْعَقَارِبُ
مِنَ السَّعِيْرِ، فَهٰؤُلَاءِ قَوْمٌ لَّا يَغْتَسِلُوْنَ مِنَ الْجَنَابَةِ
بِالتَّطْهِيْرِ، فَقَالَ يَا جِبْرِيْلُ حَسْبِيْ حَسْبِيْ هٰذَا
الْقَدْرُ، فَاَغْلَقَ مَالِكٌ بَابَ جَهَنَّمَ فِي الْفَوْرِ، ثُمَّ وَاجَهَهُ
الْخِطَابُ، فَقَالَ يَا مُحَمَّدُ حَذِّرْ اُمَّتَكَ اَنْ لَّا يَقَعُوْا فِيْ
مِثْلِ هٰذَا الْعَذَابِ، اَعَاذَنَا اللّٰهُ مِنْ تِلْكَ النَّارِ
وَالْعِقَابِ، ثُمَّ سَارَ حَتّٰى وَصَلَ اِلٰى بَابِ الْجَنَّةِ فَقَرَعَهُ
فَاَتٰى رِضْوَانُ خَازِنُ الْجَنَّةِ، فَفَتَحَهُ وَقَالَ مَرْحَبًا بِكَ
اَهْلًا وَّسَهْلًا، حَيَّاكَ اللّٰهُ قُرْبًا وَّوَصْلًا، فَإِذَا اَرْضُهَا
النُّقْرَةُ، وَرِيَاضُهَا الدُّرَّةُ، وَجِبَالُهَا الْعَنْبَرُ، وَ
شُرَّفَاتُهَا الْيَاقُوْتُ الْاَحْمَرُ، وَالْفِضَّةُ وَالذَّهَبُ
مَقَاصِيْرُهَا، وَغُرَفُهَا وَالْمِسْكُ وَالزَّعْفَرَانُ تُرَابُهَا،
وَحَشِيْشُهَا وَنَبْتُهَا، فَاَدْخَلَهُ فِيْهَا جِبْرِيْلُ، ثُمَّ
مَشَيَا فِيْ بُسْتَانِهَا الظَّلِيْلُ، فَرَاٰى اَنْهَارًا مِنْ مَّاءٍ

اَبَدًا، وَقَدِ انْشَقَّ مِنْهُ عَيْنٌ اُخْرٰى يُقَالُ لَهَا نَهْرُ
الرَّحْمَةِ فَشَرِبَ مِنْهُمَا وَاغْتَسَلَ وَتَطَهَّرَ، فَغَفَرَ
اللّٰهُ لَهٗ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهٖ وَمَا تَاَخَّرَ، وَرَاٰى فِيْهَا
مِنْ عَجَائِبِ اَنْوَاعِ النِّعَمِ مَا لَا عَيْنٌ رَاَتْ، وَلَا اُذُنٌ
سَمِعَتْ، وَلَا يَخْطُرُ قَطُّ بِبَالِ الْبَشَرِ، فَقَالَ لِوَجْهِ
رَبِّيَ الْحَمْدُ وَالشُّكْرُ، بِلَا حَدٍّ وَّلَا حَصْرٍ، اَللّٰهُمَّ
صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ ۝

## 13. ஹிகாயத்தின் வரலாறு

பின்பு நெருப்பினாற் படைக்கப்பட்ட ஓர் மலக்கை செந்தழலின் ஓர் நாற்காலியில் உட்கார்ந்தவராய் ஆயிரம் வருட தொலைத்தூர விஸ்தீரணத்திலிருக்க கண்டார்கள். அவரைச் சூழ்ந்து பல குரூர சிந்தையும், முரட்டு சுபாவமும் பொருந்திய ஊழியரும் சேவகரும் இருந்தனர். இவர்தான் நரகத்தின் அதிபதி மாலிக் என சொல்லப்பட்டது. அவர் பேரில் ஸலாம் சொல்ல, அவர் பிரதி சொல்லி தலையை நிமிர்த்தி ஓர் பார்வை பார்த்தார். அவர் கடின அச்சத்திற்குரியவர். பெரும் படைப்பினர். கொடிய அழுத்தம் பிடித்தவர். வெகு தத்துவம் படைத்தவர். கோபம் மேலிட்டவர். வன்னெஞ்சுடையவர். அவரது இருதயத்தில் அறவே இரக்கமற்றவர்.

அவருடைய ஓர் பார்வை துன்யா உலகத்தின் பேரில் விழுந்தால் அதன் கொடும் துன்பத்தினால் உலகத்துடைய ஜீவ கோடிகள் மாண்டு ஹலாக் நாசமாகிவிடுவர். ஜிப்ரீல் அவரை நோக்கி மாலிக்கே நீர் அல்லாஹ் தஆலாவின் நண்பரளவிற் பாராதீர் என்றார். உடனே அவர் முகத்தை திருப்பிக் கொண்டார். நாயகம் நரகத்தை காண்பிக்கும் படி அவரைக்கேட்ட போது அவர் தாங்கள்



غَيْرِ اٰسِنٍ، وَخَمْرٍ لَّذَّةٍ لِّلشَّارِبِيْنَ، وَلَبَنٍ لَّمْ يَتَغَيَّرْ
طَعْمُهٗ وَعَسَلٍ مُّصَفًّى، وَعِنْدَ الْاَنْهَارِ قِبَابٌ وَّ
وَّخِيَامٌ مِّنَ الْاَنْوَارِ، فِيْهَا حُوْرٌ عِيْنٌ اَتْرَابٌ وَّاَبْكَارٌ،
وَغِلْمَانٌ حِسَانُ الْوُجُوْهِ كَالْاَقْمَارِ، ثُمَّ وَجَدَ نَهْرًا
عَظِيْمًا يُقَالُ لَهُ الْحَوْضُ الْكَوْثَرُ، اَلَّذِيْ اَعْطَاهُ اللّٰهُ
تَعَالٰى فِي الْمَحْشَرِ، وَعَلٰى اَطْرَافِهٖ خِيَامٌ مِّنَ الدُّرِّ،
وَقِبَابٌ مِّنْ زُمُرُّدٍ اَخْضَرَ، وَحَافَّتُهَا الْمِسْكُ الْاَذْفَرُ،
وَحَصْبَاءُهَا الْيَوَاقِيْتُ وَالْجَوْهَرُ، وَلِكُلِّ قُبَّةٍ اَرْبَعَةُ
اَبْوَابٍ وَقُدَّامَ كُلِّ بَابٍ شَجَرَةٌ مِّنَ الدُّرَّةِ، قُضْبَانُهَا
مِنَ الْفِضَّةِ وَالنُّقْرَةِ، وَاَوْرَاقُهَا مِنَ الْعَسْجَدِ الْاَصْفَرِ،
وَاَزْهَارُهَا اَحْسَنُ مِنَ الْقَمَرِ، وَاَثْمَارُهَا اَبْيَضُ مِنَ
الثَّلْجِ، وَاَحْلٰى مِنَ الْعَسَلِ، وَاَلْيَنُ مِنَ الزُّبْدِ وَعَلٰى
شَاطِئِ النَّهْرِ، اَكْوَابٌ وَّاَبَارِيْقُ وَكُؤُوْسٌ اَكْثَرُ،
مِنْ قَطَرَاتِ الْمَطَرِ، وَاَقْدَاحٌ مِّثْلُ نُجُوْمِ السَّمَاءِ
عَدَدًا، مَنْ شَرِبَ مِنْهَا شَرْبَةً لَّا يَظْمَأُ بَعْدَهَا

நரகத்தின் கொடிய தீவினைகளை நோக்க சக்திப் பெற மாட்டீர்களென்றார். உடனே ஓர் அசரீரி மாலிக்கே எனது நண்பருக்கு வழிப்படும் மறுக்க வேண்டாம் என உண்டானவுடன் திரை நீக்கப்பட்டு, ஓர் ஊசித்துவாரப் பிரமாணம் நரகவாயல் திறக்கப்பட்டது. அதனின்றும் பற்றி எரியும் அக்கினி ஜுவாலையும் சகிக்கமுடியாத துர்நாற்றமும், புறப்பட்டன. நரகம் தனது கொடிய பாலும் கணற்பொறிகளோடு கொதித்தெழுந்தது. அதில் எடுவான், படுவான் தொலைத்தூரம் கொண்ட ஏழு அடுக்கு தட்டுகளுண்டு.

அவைகளில் ஆண்களும், பெண்களும் , பாம்பு, தேள் முதலிய விஷப் பிராணிகளுடன் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அந்த கோரங்களை பொறுக்க முடியாமல் அட்டாளித்து இரட்சிப்புக் கேட்கின்றனர். நாயகம் மாலிக்கே அவர்களுடைய பூலோக வாழ்க்கையில் உண்டான பாவ தோசங்களென்ன வெனக் கேட்டதற்கு அவர்கள் மனிதர்களை ஹிம்சித்து அவர்களின் சொத்துக்களை அனாவசியமாயும், அநியாயமாயும் பறித்து தின்றவர்கள் என்றார். இன்னும் சில ஜனங்கள் நெருப்புக் கட்டியை விழுங்க அது அவர்களின் பின் துவாரத்தினால் புறப்படுகின்றது. அவர்கள் யதீம் அநாதை மக்களின் முதல்களை அபகரித்து ஹராமாய் தின்றவர்கள். இன்னும் சில ஜனங்களின் வயறுகள், பிரமாண்டமான மலைகளைப் போல் விம்மிப் பெருத்து, அவைகளில் நெருப்பினாலாகிய பாம்பு, தேள்கள் நிரம்பிக் கிடக்கின்றன.

அவர்கள் வட்டி, பொலிசை முதலிய அசுத்த பொருட்களைத் தின்றவர்கள். இன்னும் சில பேர் தங்கள் தலைகளை நெருப்புக் கற்களில் மோதியுடைக்கின்றனர். அவர்கள் மனிதருக்கு நீதி வழங்குவதில் லஞ்சம் வாங்கினவர்கள். இன்னும் சிலர் தாகித்து இரட்சிப்புத் தேடி தண்ணீரைக் கேட்க நரகத்தின் "ஜபானிய்யாத்" ஊழியர்கள் வயிறெறியத்தக்க நரக வாசிகளின் சீழ், சலம் இவைகளை அவர்கட்கு புகட்டுவதும், அதன் கொடிய வெப்பினால் அவர்களுடைய முகத்தின் தசைகள் கழன்று விழுவதும், குடல்கள் கறிந்து கண்ட துண் மாக்கப் பட்டு, பின் துவாரத்தால் வெளிப்படுகின்றன. அவர்கள் கள்ளு, சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகித்தவர்கள்.



இன்னும் சிலர் தேகமும், முகங்களும் பன்றிகளைப் போன்றிருக்கின்றனர். இவர்களின் இறைச்சிகளை நரகத்தின் பாம்பு, தேள்கள் கொத்திப் பிடுங்கி தின்கின்றன. அவர்கள் பெருந்தொடக்கை விட்டு சுத்தமாகாமலும் குளிக்காமலும் இருந்தவர்கள். அதன் பின் ஜிப்ரீலை நோக்கி இதுவரையில் பார்த்தது போதுமென்றார்கள். உடனே மாலிக் நரகத்தின் வாயிலை அடைத்து விட்டார். பின்பு அல்லாஹ் தஆலாவின் புறத்தால் முஹம்மதே ! உம்முடைய சமூகத்தினரை இத்தகைய கொடிய வேதனையிற் சிக்குண்டு வருந்தாமல் தப்பித்துக் கொள்ளும்படி அச்சமுறுத்துமென திருவுளம் வந்தது. அல்லாஹ் தஆலா அந்நரக வேதனையை விட்டும் நம்மைக் காப்பாற்றியருள்வானாக !

அப்பால் நாயகமவர்கள் சுவர்க்கத்திற்கு போய் சேர்ந்து வாயலைத் தட்ட, சுவர்க்கதின் அதிபராகிய ரிழ்வானென்னும் மலக்கு வந்து கதவை திறந்து தங்களுக்கே சுபசோபனம், நன்மாராயம் நற்சுக வாழ்வு அல்லாஹ் தஆலா தங்களுக்கு தனது சமீப சாயுட்சயத்தை அருள்புரிவானாக வென்ற உபசார வாக்கியங்களோடு வெகு குதூகலமாய் நல்வரவேற்றார். இனி சுவர்க்கத்தின் பூமியானது வெற்றி பாலங்களாலும், அதன் தோப்புக்கள் வெண்முத்தினாலும், மலைகள் அம்பரினாலும், கோபுரங்கள் சிவந்த மாணிக்கத்தாலும், மாட மண்டபங்கள் பொன், வெள்ளியினாலும், அதன் மணல் புற்பட முதலிய விருட்சாதிகளும், கஸ்தூரி குங்குமத்தாலும் அமைக்கப் பட்டிருந்தன. ஜிப்ரீல் நாயகமவர்களை உள்ளே அழைத்துச் சென்றார்.

இருவரும் அதன் நளின சிங்கார பூங்கா வனங்களில் வெகு சல்லாபமாக உல்லாச, ஒய்யார திருநடனமுலாவி வந்தனர். அவ்விடத்தில் கலங்கமற்ற நீராறு குடிப்பவருக்கு ருசிகரமான மதுவாறு, சுவை மாறாத பாலாறு, கலப்பற்ற தெளிவான தேனாறு, என நான்கு நதிகளிலொழித்து பாய்வதை கண்டார்கள். அந்த நதிகளினோரங்களில் பசும்பொன், வெள்ளியினாலாகிய பல குடிசைகளும், கூடாரங்களுமிருந்தன. அவைகளில் சுவர்க்கப் பதியின் "ஹுருல்ஈன்" தேவ கன்னிகைகளும் இளம் பிறைபோன்ற அழகு ஜொலிக்கத் தக்க சொகுசான, முக வசீகரத்துடைய ஆண்

صَلَوَاتُ اللهِ بِكُلِّ فَمِ

اَلصَّلٰوةُ عَلَى النَّبِىِّ الْحَرَمِيِّ ، وَالسَّلَامُ عَلٰى هٰدِى الْأُمَمِ
اَلْإِمَامُ الْحَقُّ بِدِيْنِ هُدًى ، لِتَمَامِ الْخَلْقِ مِنَ النَّسَمِ
قُطْبُ الْأَفْلَاكِ لَمَا خُلِقَتْ ، لَوْلَاهُ وَأَمْلَاكُ الْعِظَمِ
فَالْعَرْشُ مَعَ الْكُرْسِيِّ لَهُ ، خُلِقَا وَاللَّوْحُ مَعَ الْقَلَمِ
غَوْثُ الثَّقَلَيْنِ وَغَيْثُهُمَا ، فَرْدٌ عِنْدَ الْفَرْدِ الْحَكَمِ
اَلرُّسْلُ مَعَ الْمَلَإِ الْأَعْلٰى ، فَبِحَيْطَتِهٖ وَمِنَ الْخَدَمِ
طَلَعَتْ أَنْوَارُ مُقَدَّسِهٖ ، بِمَنَارَةِ أَسْرَارِ الْقِدَمِ
وَزَهَتْ اٰيَاتُ طَوَالِعِهٖ ، بِمَنَصَّةِ رَايَاتِ الْعَلَمِ
نُسِخَتْ بِنُصُوْصِ شَرِيْعَتِهٖ ، شِرْعَةُ الْكُفَّارِ مَعَ الصَّنَمِ
وَمَحَتْ سُبُحَاتُ جَلَالَتِهٖ ، صَفَحَاتُ الشِّرْكِ مِنَ الرَّقَمِ
وَسُعُوْدُ مُحَيَّاهُ انْبَلَجَتْ ، فَابْتَعَدَتْ نَحِسَاتُ الظُّلَمِ
وَخَسَا إِبْلِيْسُ وَحَشَمَتُهُ ، بِثُبُوْرِ الْوَيْلِ مَعَ النَّدَمِ
وَلَصُدَّ مَصَاعِدُهُمْ لِسَمَا ، رَجْمًا بِالْقَبَسِ مِنَ النُّجُمِ
فِيْهِ سُدْنَا الْأَقْوَامَ عُلًا ، وَبِهٖ كُنَّا خَيْرَ الْأُمَمِ
رَبِّ صَلِّ عَلَيْهِ وَعِتْرَتِهٖ ، وَجَمِيْعِ الْأُمَّةِ كُلِّهِمِ

وَرُفِعَ كَفٌّ مِّنَ النُّوْرِ فَاَبْصَرَ بِهٖ اَهْلَ الْاَرْضِ السُّفْلٰى
فَنَزَلَ بِبَيْتِ الْمُقَدَّسِ فَاِذَا الْبُرَاقُ بِحَالِهٖ، فِي
الْمَوْضِعِ الَّذِيْ تَرَكَهٗ بِرِحَالِهٖ ۝ اَللّٰهُمَّ صَلِّ وَ
سَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ ۝

## 21. ஹிகாயத் வரலாறு

அப்பால் மகத்துவ மாட்சிக்குரிய ஆண்டவன் நாயகத்தை நோக்கி, முஹம்மதே ! நீர் பூலோகத்தில் இறங்கும், எனது அடியாருக்கு உமது ரிசாலத்து தூதுத்துவத்தை தெரிவியும். என்னுடைய வஸியத்து ஆக்யா பனைய உமது சமூகத்தினருக்கு அறிவியும். அவர்கள் என்னைக் கொண்டு ஈமான் நம்பிக்கை கொண்டு நல் வணக்கம் செய்வார்களாயின் நானவர்கட்கு பிழைப் பொறுத்து கிருபை செய்பவன்.

கியாமத்து மறுமை நாளில் சுவர்க்கப் பதியில் அவர்கட்கு எனது திருக் காட்சிப்புரிவேன். இன்னுமவர்கள் பதின

ான்காம் இரவில் பூரண சந்திரனைக் காணுவதைப் போல் மஹ்ஷர் மறுமையில் என்னை காண்பார்கள். எனது நண்பரே ! முஹம்மதே ! நான் உம் மீதும், நும் சமூகத்தினர் மீதும், ஒவ்வொரு இரவு, பகலிலும் ஐம்பது நேரத் தொழுகையை விதியாக்கினேன். நீர் உமது சமூகத்தினரிடம் மீண்டு, அவர்கள் இந்த தொழுகைகைய அலட்சியம் செய்யாமல் நியம கட்டளையாய், தொழும்படி என் புறத்தால் அவர்கட்குத் தெரிவியுமென கட்டளையிட்டான்.

உடனே ! ரஃப்ரஃப் என்னும் பரமத் தொட்டிலானது நாயகத்தை சுமந்துக் கொண்டு உயர்ந்தும், தாழ்ந்தும், "சித்ரத்துல் முன்தஹா" வென்னும் விருட்சத்தடியில் வந்திறங்கியது. அங்கு ஜிப்ரீலானவர் இவர்களின் வரவை எதிர்ப் பார்த்து நின்றவராய், முஹம்மதே ! நீர் சுபவந்தனம் பெற்றீர். அல்லாஹ் தஆலா உமக்கு நற்காணிக்கைப் புரிந்தான். நல்லுபசாரமருளினான். உமக்கவன் நன்கொடை அளித்ததற்காக அவனுக்கு நன்றி செலுத்துமென்றார்.

பின்பு இருவரும் ஒவ்வொரு வானமாக இறங்கி நபி மூஸா அலைஹிஸ்ஸலாமை சந்தித்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி முஹம்மதே ! நன்மாராயம் பெறும். திட்டமாக நீர் எங்களில் சிரேஷ்டமானவரும், சங்கைவாய்ந்த வருமென்றறிருந்துக் கொண்டோமெனக் கூறி நாயகத்தின் மீதும், அவர்களின் சமூகத்தினர் மீதும் அல்லாஹ்தஆலா கற்பித்ததை பற்றிக் கேட்கவே, நாயகம் ஒவ்வொரு இரவு, பகலிலும் ஐம்பது வேளைத் தொழுகையை கடமையாக்கப் பட்டதென்றார்கள்.



நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் முஹம்மதே ! நீர் உமது நாயனிடம் திரும்பவும் போய் உமது சமூகத்தினருக்கு இலேசு படுத்திக் கேளும். அவர்கள் இவ்வைம்பது வேளைத்தொழுகைக்கு சக்திப் பெறமாட்டார்கள். நான் இவ்விஷயத்தில் பனீ இஸ்ராயீல் இஸ்ரவேலர்களுடன் கன அவஸ்தை பட்டிருக்கிறேன் என்றார்கள். நாயகம் தங்கள் மேலான நாயனிடம் மீண்டும் போய் "சித்ரத்துல் முன்தஹா" என்னும் விருட்சத்தினிடம் தரிக்கவே மகத்தான ஓர் மேகமானது நாயகத்தைச் சூழ்ந்துக் கொண்டது. உடனே சாஸ்டாங்கம் செய்தவர்களாய் கிருபையாளரில் மகாக் கிருபையுடைய நாயனே ! எனது ஏழை சமூகத்தினருக்கு இறங்கி இலேசு படுத்தியருள். அவர்களிதை நிறைவேற்றுவதில் அசக்தர்கள் என்றார்கள். ஆண்டவன் ஐந்து அல்லது பத்து வேளைகளைக் குறைத்தான். திரும்பவும் வந்து மூஸா அலைஹிஸ்ஸலாமுக்கு அதனை விரைவாக தெரிவிக்கவே, நாயகத்தை மறுமுறையும் திரும்ப ஆண்டவனிடம் அனுப்பினார்கள். இவ்வண்ணமாக மூஸாவுக்கும், அல்லாஹ்வுக்குமிடையில் போய் வந்ததின் பலனாக, அல்லாஹ் தஆலா தினமொன்றுக்கு ஏற்படுத்திய ஐம்பது வேளை தொழுகையையும் ஐந்து நேரத் தொழுகையாகக் குறைத்தான்.

அதன் பின் அல்லாஹ் தஆலா முஹம்மதே ! ஒவ்வொரு நன்மையும் பத்து நன்மைக்குச் சமமென்ற விகிதாச்சாரப்படி ஒவ்வொரு நேரத் தொழுகையும் பத்து நேரத்திற்குச் சமமாகும். யாதொருவன் ஒரு நன்மையைக் கருதி அதைச் செய்யாவிடில் அவனுக்கு ஒரு நன்மை செய்த கூலியுண்டு. இன்னும் எனது கருணையினால் அதிகமாயுங் கொடுப்பேன். யாதொருவன் ஒரு தீமையை நினைத்து அதைச் செய்யாதிருப்பின் அந்நினைப்பின் குற்றத்தை மன்னிப்பேன். அதைச் செய்து விட்டால் உரிய குற்றமெழுதப்படும். முஹம்மதே ! எனது சிறப்பு வலுப்பத்தின் மீதாணையாக ! நானவர்கட்கு பிழைப் பொறுப்பேன்.

இலட்சியம் செய்ய மாட்டேன். ஆதலால் எனது வேதக் கட்டளையைச் செலுத்திவிட்டேன். என்னுடைய அடியார் மீது இலேசுபடுத்தினேன். எனவே எனது தீர்ப்பானது மறுக்கப்படுவதில்லை. எனது விதியை மாற்றப் போவதில்லையென

சொல்லப்பட்டது. பின்பு நாயகம் மூஸா நபியிடம் வந்தப் போது இன்னொரு முறையும் ஆண்டவனிடம் சென்று, நேரங்களைக் குறைத்துக் கொண்டு வரும்படிச் சொன்னார்கள். நாயகம் நான் என்னுடைய நாயனிடம் திரும்ப போவதற்கு வெட்கிக்கிறேன். அவன் என் மீது விதித்த கற்பனையை புரிந்துக் கொண்டேன் எனக் கூறினார்கள். மூஸா அலைஹிஸ்ஸலாம் பிஸ்மில்லாஹ் சொன்னவர்களாய் நாயகத்தை மரியாதையாக வழியனுப்பினார்கள்.

ஜிப்ரீல் நாயகத்தை முன் வானம் வரைக் கொண்டு சேர்த்தார். அப்பொழுது இரவானது அதன் நாழிகையில் ஓர் வினாடியேனும் கூடுதல், குறைத்தலின்றி உரியபான்மையிலிருந்தது. இனி முன் வானத்தின் வாயில் திறக்கப்பட்டு, ஒரொளியின் திரையை உயர்த்தப்படவே அதன் பிரகாசத்தால் கீழே பூமியுடையோர்களைப் பார்த்தார்கள். பின்பு பைத்துல் முகத்தஸென்னும் பரிசுத்தப் பட்டணம் வந்திறங்கியதும், புராக்கென்னும் தேவ வாகனமானது. தாங்கள் பிரயாண அடையாளத்தோடு விட்டுப் போன இடத்தில் அப்படியே இருந்தது ஆண்டவனே ! அவர்கள் மீது ஸலவாத், ஸலாம் சொல்லியருள்வாயாக !

مَرْحَبًا بِالْمُصْطَفٰى مِنْ ذِى الْعُلَا    مَرْحَبًا بِالْمُرْتَضٰى اَهْلًا وَّسَهْلَا
مَرْحَبًا بِالْمُجْتَبٰى خَيْرِ الْوَرٰى    مَنْ عَلَا الْاَعْلٰى لِمَنْ عَزَّ وَجَلَّا
وَسَرٰى شَوْقًا وَّقَدْ اَسْرٰى بِهٖ    رَبُّهٗ حُبًّا اِلٰى لُقْيَاهُ لَيْلَا
وَبِاَمْلَاكِ السَّمَاءِ بِاَسْرِهِمْ    وَبِكُلِّ الرُّسُلِ قَدْ اَمَّ وَصَلّٰى
وَرَقٰى وَالرُّوْحُ عَنْهُ مُخَلَّفٌ    طَالِبًا مِّنْ رَّبِّهٖ قُرْبًا وَّوَصْلَا
وَسَمَا السَّبْعَ السَّمٰوَاتِ الْعُلٰى    وَعَلَا الْاَعْلٰى مِنَ الْعَرْشِ الْمُعَلّٰى



وَاِلٰى قَابِ لِّقَوْسَيْنِ دَنٰى    اَوْ اِلٰى اَدْنٰى دَنٰى ثُمَّ تَدَلّٰى
قَدْ رَاٰى حَقًّا بِعَيْنَيْ رَاْسِهٖ    خَيْرَ مَوْلَى الْعَرْشِ نُوْرًا قَدْ تَجَلّٰى
فَسَقَاهُ مِنْ سُلَافَةِ قُدْسِهٖ    بَلْ كَسٰى مَا لَا كَسَا مِنْ قَبْلُ رُسْلَا
وَاَرَاهُ الْاٰيَةَ الْكُبْرَى الَّتِيْ    لَا اَرٰهَا لِسِوَاهُ قَطُّ اَصْلَا
وَحَبَاهُ الْحَقُّ مِنْ دِيْنِ الْهُدٰى    بِرَخِيْصِ الْحُكْمِ فَرْضًا ثُمَّ نَفْلَا
قَدْ اَتٰى فِيْنَا لَنَا مِنْ ذَاتِهٖ    رَحْمَةً فِيْ اٰيَةِ الْقُرْاٰنِ تُتْلٰى
يَالَهٗ مِنْ نِعْمَةٍ جَلَّتْ لَنَا    لَا نُؤَدِّيْ شُكْرَهَا قَوْلًا وَّفِعْلَا
فَلَكَمْ نِلْنَا بِمَسْرَاهُ الْمُنَا    وَاغْتَنَمْنَا مِنْ جَمِيْعِ الْخَيْرِ كُلَّا
وَلَكَمْ فُزْنَا وَحُزْنَا قُرَّةً    وَسَعِدْنَا بِغِنَى الدَّارَيْنِ نَيْلَا
سِيَّمَا بِشَفَاعَةٍ يُنْجِيْ بِهَا    كُلَّ عَاصٍ رَبَّهٗ عَمْدًا وَّجَهْلَا
يَا شَفِيْعِيْ خُذْ بِعَبْدِكَ اِنَّنِيْ    شَرُّ حَالَاتٍ اَقَلُّ الْخَلْقِ عَقْلَا
سَيِّدِيْ فَاقْبَلْ سَلَامَ تَحِيَّتِيْ    ثُمَّ حَيُّوْنِيْ بِاَحْسَنَ مِنْهُ قَوْلَا
وَعَلَيْكَ اللّٰهُ صَلّٰى دَائِمًا    وَعَنِ الْاٰلِ الرِّضٰى مِنْ خَيْرِ مَوْلٰى
وَعَفٰى عَنَّا وَعَمَّنْ عَقَدُوْا    مَجْلِسَ الْمِعْرَاجِ ذَا اَوْ مَنْ تَوَلّٰى

# 22. பைத்தின் உரை

1. மேலாம்பரமுடைய அல்லாஹ்வினால் முஸ்தபா நபிக்கே சுபச்சோபனம் முர்தழா நாயகத்திற்கே நல்வந்தனம் நல்மாராயம்.

2. ஹல்க்குகளில் ஹைரான முஜ்தபா வள்ளலுக்கே சுபமங்களம். அவர்கள் சிறப்பு வலுப்பமுடைய ஆண்டவனிடத்தில் மேலோகத்திற்கு மேல் உயர்ந்தார்கள்.

3. ஆண்டவன் அவர்களை தனது திருக்காட்சியளவில் இராவழி நடத்துவிக்க, மிக்க உகப்பாய், கன ஆசையுடன் நடந்தேகினார்கள்.

4. அந்தருலக அமரர் அனைவருக்கும், சகல ரசூல்மார்களுக்கும் முன்னிலையாய், இமாமாய் நின்றுத் தொழுவித்தார்கள்.

5. ரூஹென்னும் ஜிப்ரீலானவர் தங்களை விட்டும் பின்னிந்து தங்கள் ஆண்டவனின் திரு சமீப சேர்மானத்தை நாடி மேலேறினார்கள்.

6. மேலெழுவான்களுக்கும் மகா மேன்மையுடைய அர்ஷுக்கு மேலாய் உயர்ந்து சென்றார்கள்.

7. இன்னும் "காப கவ்ஸைன்" என்னும் சமீப சமூக ஆசிரமத்தை அணுகி அதன் மேல் "அவ்அத்னா"வென்னும் சன்னிதியில் அடுத்து சமீபித்தார்கள்.

8. திட்டமாக ஏக ஜோதிமயமாக இலங்கும் அர்ஷின் ஹைரான நாயகனை ! தங்கள் தலையின் இரு நேத்திரங்களாலும் உண்மையாய் கண்டார்கள்.

9. ஆகவே ஆண்டவன் அவர்களுக்கு தனது பரிசுத்த அமிர்த பானத்தை புகட்டி முன்னுள்ள ரசூல் மாருக்கு உடுத்தாத மகத்துவ உடைய தங்களுக்குடுத்தினான்.

10. இன்னும் அவர்களன்றி எவருக்கும் அறவே காண்பிக்காத அருமையான, பெருமையான, திருஷ்டாந்தங்களை அவர்களுக்கு காண்பித்தான்.



11. ஹக்குதஆலா நீதமான மார்க்கத்தில், சுலபமான மதக்கோட்பாடு பர்ளு, நப்லு முதலிய மதவிதிகளை அவர்களுக்கு பரிசளித்தான்.

12. தங்கள் தாத்தின் சுபாவத்தினால் நமதுப் பொருட்டு திருக்குர்ஆனில் ஓதப்பட்டு பிரகாரம் நம்மில் ரஹ்மத்தென்னும் அருளாக வந்துதித்தார்கள்.

13. அவர்கள் நமக்கு எவ்விதமாக நிஃமத்தென்றால் அந்த நிஃமத்துக்கு நாம் சொல்லாலும், செயலாலும் நன்றி செலுத்த தகுதியல்லோம்.

14. தாங்கள் வினோதய யாத்திரையின் பயனாக நாம் எம்மாத்திரமோ ஆசாபாசங்களைப் பெற்றோம். சகல நன்மைகளையும் மொத்தமான கொள்கைக் கொண்டோம்.

15. இன்னும் எம்மாத்திரமோ கண் குளிர்ந்த பவிசு பாக்கியங்களைப் பெற்றோம். இபகர செல்வ சம்பவத்துக்களையடைந்து மோட்சக் கதி எத்தினோம்.

16. முக்கியமாக அறிந்தும், அறியாமலும், ஆண்டவனுக்கு மாறு செய்யும் என் போன்ற மாபாவியடங்களையும் கடைத்தேறத்தக்க மன்றாட்டத்தால் ஜெயம் பெற்றோம்.

17. என்னை மன்றாடி இரட்சிப்பவரை ! தங்களின் இவ்வடிமையை கைப்பிடியுங்கள். திட்டமாக நான் படைப்புகளில் அற்பப் புத்தி படைத்தவனும், துஷ்ட சுபாவமுடையவனாயிருக்கிறேன்.

18. எனது நாயகரே ! எனது காணிக்கையாகிய ஸலாமை அங்கீகரித்து, அதிலும் அழகான இனிய சொல்லாலெனக்கு பிரதியுத்தரவளியுங்கள்.

19. அல்லாஹ் தஆலா தங்கள் மீது எக்காலமும் ஸலவாத்து சொல்வானாக ! தங்கள் ஆட்களைத்தொழும் ஹைரான நாயனின் பொருத்தமுண்டாகுக.

20. இன்னும் எங்களுக்கும், இந்த மிஃராஜ் மஜ்லிஸை நியமித்தோர், நிர்வகித்தோருக்கும் அல்லாஹ்தஆலா பாவமன்னிப்பருள்வானாகவும்.

ثُمَّ رَكِبَهُ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ فَطَارَ بِهِ عَلَى الْهَوَاءِ
بِسُرْعَةٍ، حَتّٰى اَتٰى مَكَّةَ زَادَهَا اللّٰهُ كَرَامَةً وَّ رِفْعَةً،
فَقَالَ يَاجِبْرِيْلُ اِنَّ قَوْمِيْ يُكَذِّبُوْنَنِيْ وَلَا يُصَدِّقُوْنَنِيْ
فَقَالَ يَا مُحَمَّدُ اِنْ كَذَّبَكَ اَبُوْجَهْلٍ صَدَّقَكَ اَبُوْبَكْرِنْ
الصِّدِّيْقُ، فَهُوَ صَاحِبُكَ الرَّفِيْقُ، ثُمَّ وَدَّعَهُ جِبْرِيْلُ
مَضَى فَلَقِيَهُ عَمُّهُ الْعَبَّاسُ فِي الطَّرِيْقِ، فَقَالَ مَا
شَأْنُكَ يَا مُحَمَّدُ، فَقَالَ يَا عَمِّيْ، لَقَدْ اُسْرِيَ بِيَ الْبَارِحَةَ
اِلٰى رَبِّيْ، مِنْ مَكَّةَ اِلٰى بَيْتِ الْمُقَدَّسِ اِلٰى سَبْعِ
سَمٰوَاتٍ، وَقَدْ رَأَيْتُ مِنْ عَجَائِبِ الْمَخْلُوْقَاتِ، وَذَكَرَ
لَهُ مَارَأٰهُ اِلٰى اٰخِرِ الرِّوَايَاتِ، فَقَالَ يَا مُحَمَّدُ اِنَّ
قَوْمَكَ كَذَّبُوْكَ، وَلَمْ يُصَدِّقُوْكَ وَلَا يُؤْمِنُوْنَ
بِحَدِيْثِكَ اَبَدًا، فَلَا تُحَدِّثَنَّ بِهِ مِنَ الْقُرَيْشِ اَحَدًا
فَقَالَ وَاللّٰهِ لَاُحَدِّثَنَّ بِمَا اتَّخَذْتُ مِنَ اللّٰهِ عَهْدًا،
ثُمَّ انْطَلَقَ اِلٰى مَنْزِلِ اُمِّ هَانِئٍ بِنْتِ عَمِّهِ، فَوَجَدَ
فِرَاشَهُ لَمْ يَبْرُدْ مِنْ اَثَرِ نَوْمِهِ، وَذَكَرَ لَهَا الْحَالَ



بِتَمَامِهِ، فَقَالَتْ بِاَبِيْ وَاُمِّيْ اَنْتَ يَارَسُوْلَ اللّٰهِ،
لَا تُحَدِّثَنَّ بِهِ قُرَيْشًا فَاِنَّهُمْ يُكَذِّبُوْنَكَ وَيُسَفِّهُوْنَكَ
وَيَرُدُّ عَنْكَ مَنْ اٰمَنُوْا بِكَ، فَقَالَ وَاللّٰهِ لَاُحَدِّثَنَّ
هُمْ بِجَمِيْعِ اَحْوَالِيْ، فَاِنْ صَدَّقُوْا وَاٰمَنُوْا وَاِلَّا فَلَا
اُبَالِيْ، ثُمَّ دَخَلَ الْمَسْجِدَ الْحَرَامَ، فَاَوَّلُ مَنْ مَرَّ
بِهِ اَبُوْجَهْلِ بْنُ هِشَامٍ، فَلَمَّا رَاٰهُ دَنَا اِلَيْهِ وَجَلَسَ
كَالْمُسْتَهْزِئِ بَيْنَ يَدَيْهِ، وَقَالَ يَا مُحَمَّدُ هَلْ فِي
الْبَارِحَةِ شَيْءٌ مِّنَ الْاَخْبَارِ، فَقَالَ نَعَمْ، قَدْ اُسْرِيَ
بِيْ اِلٰى بَيْتِ الْمُقَدَّسِ وَاِلَى الْجَنَّةِ وَالنَّارِ، ثُمَّ ذَكَرَ
لَهُ مَارَاٰهُ مِنَ الْعَجَائِبِ وَالْاَسْرَارِ، فَقَالَ يَا مُحَمَّدُ
ثُمَّ اَصْبَحْتَ بَيْنَ ظَهْرَانَيْنَا، فَقَالَ نَعَمْ، قَالَ اَفَتُحَدِّثُ
بِهِ قَوْمَكَ، فَقَالَ نَعَمْ، فَصَاحَ لَعَنَهُ اللّٰهُ بِهِمْ يَا
مَعْشَرَ بَنِيْ كَعْبِ بْنِ لُؤَيٍّ هَلُمُّوْا جَمِيْعًا، فَحَضَرُوْا
السَّاعَةَ سَرِيْعًا، فَقَالَ اَبُوْ جَهْلٍ يَا مُحَمَّدُ حَدِّثْ
قَوْمَكَ، بِمَا حَدَّثْتَنِيْ بِهِ وَلَا تُمْسِكْ، فَقَالَ

صَلَّيْتُ الْبَارِحَةَ فِيْ مَكَّةَ، وَالْغَدَاةَ فِي الْوَادِ الْاَعْلٰى
وَمَا بَيْنَ ذٰلِكَ فِي الْمَسْجِدِ الْاَقْصٰى وَعُرِجَ بِيْ اِلَى
السَّمٰوَاتِ الْعُلٰى، حَتّٰى كُنْتُ مِنْ رَبِّيْ كَقَابِ قَوْسَيْنِ
اَوْ اَدْنٰى، وَكَلَّمَنِيْ رَبِّيْ بِكَلِمَاتٍ، وَفَرَضَ عَلَيَّ وَعَلٰى
اُمَّتِيْ خَمْسَ صَلَوَاتٍ، وَرَأَيْتُ الْجَنَّةَ وَالنَّارَ وَالْعَرْشَ
وَالْكُرْسِيَّ وَغَيْرَ ذٰلِكَ مِنَ الْعَجِيْبَاتِ، وَقَصَّ عَلَيْهِمُ
الْقِصَّةَ اِلٰى اٰخِرِ الرِّوَايَاتِ، فَقَالُوْا يَا مُحَمَّدُ حَدِّثْنَا
عَنِ الْاَنْبِيَاءِ وَمَنْ رَأَيْتَ مِنْهُمْ، فَقَالَ رَأَيْتُ اِبْرَاهِيْمَ
وَمُوْسٰى وَعِيْسَى ابْنَ مَرْيَمَ، وَغَيْرَهُمْ وَوَصَفَهُمْ،
فَقَالُوْا وَمَنْ رَأَيْتَ مِنْ قَوْمِنَا، قَالَ رَأَيْتُ عِمْرَانَ
ابْنَ جُنْدُبٍ وَهُوَ رَجُلٌ قَصِيْرٌ، اَشْبَهُ مِنْكَ يَا اَبَا
جَهْلٍ يُعَذَّبُ فِي النَّارِ السَّعِيْرِ، فَلَمَّا سَمِعُوْا تَعَجَّبُوْا
وَتَوَقَّفُوْا بَيْنَ تَكْذِيْبٍ وَّتَصْدِيْقٍ، ثُمَّ انْطَلَقُوْا
اِلٰى اَبِيْ بَكْرِنِ الصِّدِّيْقِ، وَقَالُوْا لَهُ اَلْحَقْ صَاحِبَكَ
الرَّفِيْقَ، فَاِنَّهُ اُسْرِيَ بِهٖ اِلٰى بَيْتِ الْمُقَدَّسِ وَاِلَى



اِلَى السَّمٰوَاتِ السَّبْعِ فِيْ بَارِحَتِهٖ، ثُمَّ رَجَعَ اِلٰى مَكَّةَ
بِلَيْلَتِهٖ، فَقَالَ اَبُوْ بَكْرٍ اَفَحَدَّثَكُمْ رَسُوْلُ اللّٰهِ
صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ بِهٰذَا الْمَقَالِ، فَاِنِّيْ اَشْهَدُ
اَنَّهٗ رَسُوْلُ اللّٰهِ وَاُصَدِّقُهٗ مِنْ اَخْبَارِ السَّمٰوَاتِ
فِيْمَا قَالَ، ثُمَّ قَالَ اَبُوْ جَهْلٍ يَا مُحَمَّدُ صِفْ لَنَا بَيْتَ
الْمُقَدَّسِ عَنْ صِفَتِهٖ وَهَيْئَتِهٖ، فَوَصَفَ شَيْئًا وَّ
تَوَقَّفَ عَنْ شَيْءٍ مِّنْ صُوْرَتِهٖ وَمَاهِيَتِهٖ، فَجَلَّاهُ اللّٰهُ
لَهٗ فَاقْتَلَعَهُ جِبْرِيْلُ وَحَمَلَهٗ عَلٰى جَنَاحِهٖ اِلٰى حَضْرَتِهٖ
فَقَالَ لَهُمْ اِسْئَلُوْا عَمَّا شِئْتُمْ مِنْ حَالَاتِهٖ وَذَكَرَ
لَهُمْ جَمِيْعَ اَسْبَابِهٖ وَاٰلَاتِهٖ، ثُمَّ سَأَلُوْهُ عَنِ الرَّكْبِ
فَقَالَ مَرَرْتُ عَلٰى عِيْرِ بَنِيْ فُلَانٍ، وَقَدْ ضَلَّ بَعِيْرُ
تَهُمْ، فَدَلَلْتُهُمْ عَلَى الْمَكَانِ، وَكَانَ فِيْ رِحْلِهِمْ مَاءٌ
فَشَرِبْتُهٗ لِلْاِرْتِوَاءِ، وَطَرَحْتُ الْقَدَحَ هُنَالِكَ،
فَاسْئَلُوْهُمْ عَنْ ذٰلِكَ، ثُمَّ قَالُوْا اَخْبِرْنَا مَتٰى تَجِيْءُ
الْعِيْرُ، فَقَالَ عِنْدَ طُلُوْعِ الشَّمْسِ بِلَا نَكِيْرٍ فَانْتَظَرُوْا

ذٰلِكَ، حَبَسَ اللّٰهُ الشَّمْسَ حَتّٰى تَطْلُعَ الْعِيْرُ، فَقَالَ
رَجُلٌ هٰذِهِ الشَّمْسُ وَقَالَ اٰخَرُ هٰذِهِ الْعِيْرُ، فَاٰمَنَ
قَوْمٌ وَقَالُوْا اِنَّ هٰذَا الْحَقُّ وَّصَوَابٌ، وَكَانُوْا اَرْبَعَةَ
اٰلَافٍ مِّنَ الْحَاضِرِيْنَ عَلٰى قَوْلِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ
اللّٰهُ عَنْهُمْ اَجْمَعِيْنَ، وَكَذَّبَ بِهٖ اٰخَرُوْنَ فَرَمَوْهُ
بِالسِّحْرِ وَالْاِرْتِيَابِ، وَقَالَ اَبُوْ بَكْرِنِ الصِّدِّيْقُ وَاللّٰهِ
لَقَدْ صَدَقْتَ يَا رَسُوْلَ اللّٰهِ، فَقَالَ يَا اَبَا بَكْرٍ اِنَّكَ
الصِّدِّيْقُ الْاَكْبَرُ، فَاَوْحَى اللّٰهُ تَعَالٰى اِلَيْهِ وَمَنْ
يُّطِعِ اللّٰهَ وَالرَّسُوْلَ فَاُولٰٓئِكَ مَعَ الَّذِيْنَ اَنْعَمَ
اللّٰهُ عَلَيْهِمْ مِّنَ النَّبِيّٖنَ وَالصِّدِّيْقِيْنَ وَالشُّهَدَاۤءِ
وَالصّٰلِحِيْنَ، وَحَسُنَ اُولٰٓئِكَ رَفِيْقًا، ذٰلِكَ الْفَضْلُ
مِنَ اللّٰهِ وَكَفٰى بِاللّٰهِ عَلِيْمًا، دَعْوٰىهُمْ فِيْهَا سُبْحَانَكَ
اللّٰهُمَّ وَتَحِيَّتُهُمْ فِيْهَا سَلَامٌ، وَاٰخِرُ دَعْوٰىهُمْ اَنِ
الْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ٥ اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَ
بَارِكْ عَلَيْهِ ٥



## 23. ஹிகாயத் வரலாறு

அதன் பின் நாயகம் புராக்கின் மீதேறினார்கள். அவர்களை சுமந்துக் கொண்டு அதிவேகமாய் ஆகாயத்தில் பறந்து திருமக்கமா நகரம் வந்துச் சேர்ந்தது. நாயகம் ஜிப்ரீலே ! என்னுடைய ஜனங்கள் இவ்விஷயத்தில் என்னை உண்மைக் கொள்ளாது பொய்யாக்குவார்களே?வென்றார்கள். ஜிப்ரீல் முஹம்மதே ! உம்முடைய விஷயத்தை அபூ ஜஹ்ல் பொய்யாக்கிவித்த போதிலும், உமக்கு நண்பரான அபூபக்கர் சித்தீக் உண்மைக் கொள்வாரெனக் கூறி, நாயகத்தை வழியனுப்பி, விடைப் பெற்றுக் கொண்டு மறைந்துவிட்டார்.

நாயகம் வரும் வழியில் தங்கள் சிறிய தகப்பனார் அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுவை சந்தித்தார்கள். அவர் முஹம்மதே ! உமது விஷயமென்னவென்றார். நாயகம் எனது சிறிய தந்தையரே ! இன்றிரவு நான் மக்காவிலிருந்து பைத்துல் முகத்தஸ் வரையிலும் அதிலிருந்து ஏழு வானமளவும் இராவழி நடத்தப்பட்டேன். படைப்புக்கள் அடங்களின் அபூர்வ காட்சிகளை தரிசித்தேன் என முழு சரித்திரத்தையும் கூறினார்கள். அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் முஹம்மதே ! உம்முடைய சமூகத்தினர் உம்மை பொய்யரென்பார்கள். விசுவாசிக்காதவர்கள் இவ்விசயங்களை ஒரு காலும் நம்பிக்கைக் கொள்ளார்கள். ஆதலின் குறைஷி வமிசத்தினருள் எவரிடத்திலேனும் இவ்விஷயத்தை சொல்லாதீர் என்றார்.

நாயகம் அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவனிடத்தில் நானெடுத்திருக்கும் அருதிமானத்தைக் கொண்டு பேசியே தீர்ப்பேனெனக் கூறிவிட்டு தங்கள் சிறிய தந்தையார் மகள் உம்மு ஹானி ரழியல்லாஹு அன்ஹாவின் வீட்டில் பிரவேசித்ததும் தங்கள் படுக்கை விரிப்பில் நித்திரையின் சூடு தனியாதிருக்கக் கண்டார்கள். உம்மு ஹானி அவர்களிடமும் தங்கள் முழு வரலாற்றையும் பகர்ந்தார்கள். அதற்கவர்கள் அல்லாஹ்வுடைய ரசூலே ! என் தாயும், தகப்பனும் தங்கள் பாதத்திற்கே அர்ப்பணம் இது விஷயத்தை குறைஷி வமிசத்தினருக்கு சொல்லாதீர்கள். அவர்கள் தங்களை பொய்யர், அறிவீனர் என்பார்கள். தங்களைக்

கொண்டு நம்பிக்கை கொண்டவர்களும் ஒரு சமயம் மாறி விடுவாரென்றார்கள். நாயகம் அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவர்களுக்கு எல்லா விஷயங்களையும் சொல்லியே முடிப்பேன்.

அவர்கள் உண்மையில் விசுவாசங் கொண்டால் நன்று. இல்லாதிடினும் நான்பாராட்டப் போவதில்லை என்று சொல்லி அதன்பின் மஸ்ஜிதுல் ஹராமென்னும் சங்கைப் பெற்ற பள்ளியினுள் புகுந்தார்கள். அங்கு முதன் முதலாய் அபூஜஹ்லுப்னு ஹிஸாமே தென்பட்டான். அவன் நாயகம் அவர்களை காண்கவே அருகில் வந்து பரிகாசம் பண்ணுபவன் போல் சமுகத்தில் உட்கார்ந்துக் கொண்டு முஹம்மதே ! இன்னிரவு ஏதேனும் விசேஷங்கள் உண்டாவெனக் கேட்டான். அதற்கு நாயகம் உண்டு நான் பைத்துல் முகத்தஸென்னும் பரிசுத்தப் பட்டணம் வரையும், அதிலிருந்து வானலோகம், சுவர்க்கம் நரகம் வரையிலும், இராவழி நடத்தப் பட்டேனென தாங்கள் தரிசித்த, அதிசய, அந்தரங்க காட்சிகள் யாவற்றையும் அவனுக்கு போதித்தார்கள்.அவன் முஹம்மதே ! அப்பால் அதிகாலையிலே எங்கள் முன் தோன்றினீரோவென்றான். நாயகம் மெய்தான் என்றார்கள். அபூஜஹ்ல் இது விஷயத்தை உம்முடைய சமூகத்திற்கு சொல்வீராயென்றான்.

நாயகம் அவர்கள் ஆமென்றார்கள். உடனே அபூஜஹ்ல் எழுந்து ஒ ! கஃபுப்னு லுஅய் உடைய மக்களே ! எல்லோரும் விரைந்து வாருங்கள் என உரக்க கூவியழைத்தான். அது கேட்டவர்களெல்லாம் அதி சீக்கிரம் வந்து குழுமினார்கள். அபூ ஜஹ்ல் முஹம்மதே ! இதோ உம்முடைய சமூகத்தினருக்கு என்னிடம் சொன்ன சரித்திரங்கள் ஒன்றையாவது மறையாமல் சொல்லுமென்றான். நாயகம் நான் இற்றிரவு மக்காவில் தொழுதேன். காலையில் "வாதில் அஃளா"வில் தொழுதேன். அதற்கிடையில் மற்றும் தொழுகைகளை பைத்துல் முகத்தஸில் தொழுதேன்.

இன்னும் நான் எழுவான்களுக்கு மேலால் மிஃராஜுக்கேற்றி செல்லப்பட்டு எனது நாயனிடத்தில் "காபகவ்ஸைனி அவ்அத்னா" வென்னும் சமீப தானத்திலாயிருந்தேன். என்னுடைய ஆண்டவன் என்னோடு திருவசனம் புரிந்தான். என் மீதும், எனது சமூகத்தினர் மீதும், ஐந்து வேளைத் தொழுகையை விதியாக்கினான். இன்னும் நான் சுவர்க்கம், நரகம், அர்ஷ், குர்ஷ், முதலிய அநேக அதிசய



அற்புதங்களையும் தரிசித்தேனென ஆதியோடு அந்தம் எடுத்துரைத்தார்கள்.

இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த அபூ ஜஹ்ல் முஹம்மதே ! தீர்க்கதரிசிகளில் யார் யாரை கண்டீர் என்று கேட்கவே அதற்கு நாயகம் இப்ராஹீம், மூஸா, ஈஸப்னு மர்யம் அலைஹிமிஸ்ஸலாம் முதலியவர்களைக் கண்டேனென்று, அவர்களின் குணம், குறிகளையும், இலட்சணங்களையும் வருணித்துக் கூறினார்கள். அபூஜஹ்ல் எங்கள் ஆசாமிகளில் யாரை கண்டீரென்றான். நாயகம் இம்ரானுப்னு ஜுன்துபை கண்டேன். ஹேய் அபூ ஜஹ்லே ! அவன் உன்னைப் போன்றுகுள்ள மனிதன். எரிநரகில் வேதனைப்படுகிறான் என்றார்கள். இவ்வற்புதங்களை கேட்டுக் கொண்டிருந்தவர்கள் மிக்க ஆச்சரியமுற்று இதைச் சிலர் நம்பியும், சிலர் நம்பாமலுமாக எழுந்து அபூபக்கர் சித்தீக் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் சென்று அபூபக்கரே ! உமது தோழர் முஹம்மதைச் சேர்ந்துக் கொள்ளும், அவர் இன்றிரவு "பைத்துல் முகத்தஸ்" முதல் ஏழு வானங்கள் வரை ஏற்றிச் செல்லப்பட்ட அதே இரவில் மக்கமா நகரம் வந்து சேர்ந்து விட்டாராமென்றனர்.

அப்பொழுது அபூபக்கர் சித்தீக் ரழியல்லாஹு அன்ஹு நாயகம் உங்களுக்கு அவ்விதம் அறிவித்தார்களா? அப்படியானால் திட்டமாக அவர்கள் அல்லாஹ் தஆலாவுடைய திருத்தூதரென்னு சாட்சிக் கூறுகிறேன். அவர்கள் சொல்லும் வானலோகத்தின் அற்புத சமாச்சாரங்களை அப்படியே ஒப்புக் கொள்கிறேன் என்றார்கள். அதன்பின் அபூஜஹ்ல் முஹம்மதே ! நீர் பைத்துல் முகத்தஸைப் பற்றிய கோலங்குறிகளை எங்களுக்கு வர்ணியுமென்ற போது, நாயகம் அப்படியே சிலதை வர்ணித்து வருகையில் அவர்களுக்கு அல்லாஹ் தஆலா பைத்துல் முகத்தஸை கண்முன் வெளியாக்கினான். நாயகம் அக்கூட்டத்தினரை நோக்கி அதன் ஒவ்வொரு அம்சங்களையும் உறுப்பினங்களையும் விரித்துரைத்தார்கள்.

பின்பு, அவர்கள் தங்கள் யாத்திரைக் காரர்களைப் பற்றிக் கேட்கவே நான் இன்னின்ன கிளையாரின் யாத்திரைக் காரரோடு சென்றேன். அவர்களின் ஒட்டகை வழித்தப்பிப் போயிற்று. நான் அவர்கட்கு துப்பறிவித்தேன். இன்னும் அவர்களிடம் தண்ணீர்

இருந்தது. நான் தாகத்தை தீர்த்துக் கொள்வதற்காக வாங்கிக் குடித்துவிட்டு கென்டியை அங்கேயே போட்டு விட்டேன். நீங்கள் அது விஷயத்தைப் பற்றி அவர்களிடம் கேட்டறிந்துக் கொள்ளலாம் என்றார்கள். அவர்கள் அவ்வாகனக் காரர்கள் இங்கே எப்பொழுது வருவார்கள் என கேட்டதற்கு நாயகம் சூரியனுதிக்கும் போது என்றார்கள்.

அது போலவர்களின் வரவை எதிர்பார்த்திருந்தனர். அந்த யாத்திரிகர்கள் வரும் வரை அல்லாஹ் தஆலா சூரியனைத் தடுத்து வைத்திருக்கையில் ஒரு மனிதன் இதோ சூரியனுதித்து விட்டதென்றான். மற்றொருவன் இதோ யாத்திரீகள் வந்து விட்டனரென்றான். இதனால் சில ஜனங்கள் ஈமான் நன்னம்பிக்கை கொண்டவர்களாய் இது உண்மையான "முஃஜிஸத்" அதி அற்புதமென்றனர். இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்களின் சொல்படி அவ்விதம் சமூகமானவரில் ஈமான் நன்னம்பிக்கைக் கொண்டோர் 4000 பேர்களாகும். இவர்கெளல்லோருக்கும் அல்லாஹ் தஆலாவின் கருணையுண்டாகுக. மற்றவர்களிதை பொய்யாக்கி சூனியமென்றனர். அதன்பின் அபூபக்கர் சித்திக் ரழியல்லாஹு அன்ஹு அல்லாஹ் தஆலாவின் மீது சத்தியமாக அல்லாஹ்வின் ரசூலே தாங்கள் உண்மை சொன்னீர்களென்றனர்.

நாயகம் அபூபக்கரே ! நீர் "சித்தீக்குல் அக்பர்" பெரிய உண்மைவான் என்றார்கள். அல்லாஹ் தஆலாவிடமிருந்து திருவுளம் வந்தது. அல்லாஹ்வுக்கும், ரசூலுக்கும் வழிப்பட்டால் அவர்கள் நபிமார்கள், சித்தீகீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்கள் என்னும் நல்லடியார்களுடனிருப்பார்கள். அவர்களே நல்ல அழகான துணைவராவர் என்பதாகும். அதுவே அல்லாஹ் தஆலாவின் திரு வரிசைக் கொடையுமாகும். அல்லாஹ் தஆலாவே அறிவாளரில் தக்க போதுமானவன் சுவர்க்கத்தில் அவர்களின் பிரார்த்தனையானது அல்லாஹ்தஆலாவை ஸ்தோத்திரம் செய்வதும், அவர்களின் காணிக்கை, ஒவ்வொருவரும் ஸலாம் சொல்லிக் கொள்வதும் அப்பிரார்த்தனையின் தீர்மானம் அகில உலகத்தினரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே எல்லா ஸ்துதியங்களுமென்று புகழ்வதுமாகும்.





١ بِحَمْدِكَ يَا مُسْتَوْجِبَ الْحَمْدِ وَالشُّكْرِ
وَاِنْ لَّمْ نَكُنْ نُحْصِىْ ثَنَاءَكَ بِالذِّكْرِ
٢ فَكَيْفَ وَقَدْ اَسْبَغْتَ مِنْ خَيْرِ نِعْمَةٍ
عَلَيْنَا وَكَمْ اَتْبَعْتَهَا نِعْمَةَ الْاِثْرِ
٣ فَمِنْ خَيْرِهَا اِرْسَالُ رُسْلِكَ فِى الْوَرٰى
خُصُوْصًا بِخَيْرِ الرُّسْلِ فِيْنَا مَعَ الْبُشْرِ
٤ وَكَمْ لَكَ فِيْنَا مِنْ اَيَادِىْ اَجِلَّةٍ
بِلَيْلَةِ مِعْرَاجٍ وَّجَلَّتْ عَلَى الْقَدْرِ
٥ فَهَا نَحْنُ جَمْعًا قَدْ قَرَأْنَا بِحُبِّهٖ
اَحَادِيْثَ مِعْرَاجٍ بِقِصَّةِ مَا اُسْرِى
٦ فَيَارَبِّ فَضْلًا بِالْقَبُوْلِ وَبِالرِّضَا
بِمَنْ قَرَأُوْا فِيْهَا بِذَا النَّظْمِ وَالنَّثْرِ
٧ وَمَنْ سَمِعُوْا مِنَّا وَمَنْ حَضَرُوْا هُنَا
وَمَنْ عَظَّمُوْا اَوْسَاعَدُوْا خِدْمَةَ النَّصْرِ
٨ وَمَنْ اَنْفَقُوْا اَوْ اَطْعَمُوْا بِمَحَبَّةٍ

وَمَنْ طَيَّبُوْا اَوْ اَنْثَرُوا الزَّهْرَ بِالْعِطْرِ

٩ وَمَنْ حَثَّنِيْ اَلْاِنْشَا مُحَمَّدُ عُمَرِنَا
وَعَبْدِ الْكَرِيْمِ بْنِ اَحْمَدَ ذِي الشُّهْرِ

١٠ خُصُوْصًا لِذَيَّا الْمَلِكَرِيِّ فَاِنَّهُ
مَشْئُوْمُ شَرِيْرُ الطَّبْعِ فِي الصِّغْرِ وَالْكِبْرِ

١١ وَلَا فِيْهِ خَيْرٌ قَطُّ مِنْ كُلِّ وِجْهَةٍ
سِوَى مَدْحِ مَحْبُوْبِيْ وَقَدْ طَابَ مِنْ ذِكْرِ

١٢ فَحَسْبِيْ بِهِ اَنْ يَغْمِزُوْا لِيْ بِطَرْفِهِ
لِكَيْ يَسْلُكُوْنِيْ فِي الشَّفَاعَةِ فِي الْحَشْرِ

١٣ كَذَاكَ اُصُوْلِيْ مَعْ فُرُوْعِيْ وَاِخْوَتِيْ
وَاَهْلِيْ وَاَحْبَابِيْ لَدَى الْعُسْرِ وَالْيُسْرِ

١٤ وَيَا رَبَّنَا افْتَحْ بَابَ غَيْبِكَ رَحْمَةً
بِمَجْلِسِنَا هٰذَا الْمُبَارَكِ الذِّكْرِ

١٥ وَكُنْ قَيِّمًا فِيْنَا وَوَالِيْ اُمُوْرِنَا
وَصِلْنَا بِعُرْفٍ لَا بِنُكْرٍ وَّلَا هِجْرِ



١٦ وَنَسْأَلُكَ التَّوْفِيْقَ فِيْمَا تُحِبُّهُ
وَتَرْضَى مِنْ اٰدَابِ السُّلُوْكِ مَعَ السَّيْرِ

١٧ مِنِ اصْلَاحِ اَعْمَالٍ وَّاِخْلَاصِ تَوْبَةٍ
مِنَ الْبِرِّ وَالتَّقْوٰى مِنَ الشُّكْرِ وَالصَّبْرِ

١٨ وَنَرْجُوْكَ اَنْ تَعْفُوْا جَمِيْعَ ذُنُوْبِنَا
وَتَغْفِرَ زَلَّاتِ الْكَبَائِرِ وَالصِّغْرِ

١٩ وَتُسْبِلَ عَنْ سَوْاٰتِنَا سِتْرَ قَابِلٍ
مُقِيْلٍ لِاَعْثَارٍ وَّاَعْذَارِ ذِي الْعُذْرِ

٢٠ وَتَعْمُرَنَا فِي الدِّيْنِ خَيْرَ عِمَارَةٍ
عَلٰى مِلَّةِ الْاِسْلَامِ لَا مِلَّةِ الْكُفْرِ

٢١ عَلٰى خَيْرِ اِيْمَانٍ عَلَى الْحَقِّ وَالْهُدٰى
عَلٰى طِيْبِ عَيْشٍ فِي الْحَيٰوةِ بِلَا عُسْرِ

٢٢ عَلٰى كَلِمَةِ التَّوْحِيْدِ عِنْدَ مَمَاتِنَا
بِخَاتِمَةٍ حُسْنٰى بِلَا فِتْنَةِ الْقَبْرِ

٢٣ اِلٰهِيْ اَعِذْنَا مِنْ عَذَابِ جَهَنَّمِ

اَمَانًا وَّ اَدْخِلْنَا الْجِنَانَ عَلَى الْقَصْرِ

٢٤ وَهٰذَا رَسُوْلُ اللّٰهِ فَلْيَشْفَعًا بِنَا

لَنَا فِيْهِ حَقٌّ مِّنْ حُقُوْقِيَّةِ الذُّخْرِ

٢٥ فَحَقِّقْ لَنَا مِنْكَ اللِّقَا بِلِقَائِهٖ

وَذَاكَ الْمُنَافَا لِكُلٍّ خَيْرٌ عَلٰى خَيْرِ

٢٦ وَصَلِّ عَلٰى هٰذَا النَّبِيْ خَيْرِ مَنْ سَرٰى

اِلَيْكَ وَخَيْرِ الْعَبْدِ نَحْوَكَ قَدْ اُسْرِيْ

٢٧ وَسَلِّمْ عَلٰى هٰذَا الرَّسُوْلِ وَاٰلِهٖ

وَاَوْلَادِهٖ مَعْ اَهْلِهِ السَّادَةِ الطُّهْرِ

٢٨ وَاَيْضًا عَلَى الصِّهْرَيْنِ وَالْخَتْنَيْنِ وَالْ

بَقِيَّةِ مِنْ اَهْلِ الْبِشَارَةِ مِنْ عَشْرِ

٢٩ وَسَائِرِ اَصْحَابٍ كِرَامٍ وَّتُبَّعٍ

لَهُمْ بِالْهُدٰى فِى الدِّيْنِ كَالْاَنْجُمِ الزُّهْرِ

٣٠ كَذَا وَعَلَيْنَا كُلَّمَا الْحَمْدُ وَالثَّنَا

لِوَجْهِكَ يَا مُسْتَوْجِبَ الْحَمْدِ وَالشُّكْرِ



## 24. ஹிகாயத்தின் வரலாறு

1. எல்லாப் புகழுக்கும், துதிக்கும் சுதந்திர பாத்தியமுடைய நாயனே! உனது புகழை நாங்கள் மட்டிட இயலாதெனினும், உனது புகழை கொண்டே முடிவுக்கு வந்தோம்.

2. எப்படியென்றால் நீயோ எங்கள் பால் நல்ல நிஃமத்துக்களை நிரம்பக் குவித்து அதன் மேலும் எம்மட்டோ அளவற்ற பௌஜ் பாக்கியங்களை தொடர்ந்தருளியிருக்கிறாய்.

3. அவைகளில் ஹைரானநிஃமத்தானது, ஹல்க்குகளில் உனது ரசூல் மார்களை அனுப்பியதும், அதிலும் பிரதானமாக ரசூல்மாரில் ஹைரான நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எங்களில் நன்மாராயம் கொண்டு விடுத்ததுமேயாகும்.

4. இன்னும் எம்மாத்திரமோ உனக்குரிய மகத்தான நற்பாக்கியங்கள் எங்கள் பொருட்டு இந்த மிஃராஜென்னும் விண்ணோதய யாத்திரையில் புதைந்திருக்கின்றன.

5. இதோ நாங்கள் அந்நாயகரின் உகப்பினால் அவர்களின் மிஃராஜினது திருவாய்மைகளென்னும் ஹதீதுகளையும், ஆகமங்களையும் ஓதினோம்.

6. ஆண்டவனே! உனது நல்வரிசையினால் அவ்வோதலை அங்கீகரித்து அச்சரித்திர வரலாற்றில் இந்த பைத்துகள் வசனங்களை ஓதினோர்க்கும்.

7.இன்னுமிதை கேட்போர், இம்மஜ்லிஸில் சமுகமாயிருப்போர், சங்கை, மரியாதையோடு சிறப்பித்தோர், பணிவிடை, உதவி ஒத்தாசை புரிந்தாதரவளித்தார்க்கும்

8. இன்னும் அந்நாயகரில் நற்புரீதியுடன் பொருள் போஜன முதலிய தருமங்களை செய்தோர்க்கும், பரிமளவாசனைத் திரவியங்களால் இம்மஜ்லிஸை மணமாக்கினோர்க்கும்.

9. இன்னுமிந்த மிஃராஜ் மாலை கோவை செய்யும் படி என்னைத் தூண்டுதல் செய்த எங்கள் முஹம்மது உமருக்கும், பிராக்கியாதிப் பெற்ற அஹ்மது லெப்பை மரைக்கர் குமாரர் அப்துல்கரீமுக்கும்

10. முக்கியமாக மல்கரீ வம்சத்திலுள்ள இச்சிறு பயலுக்கும் உனது திருவருள் பொருத்தத்தை தந்தருள்வாயாக! நிச்சயமாக அவனோ இளமையிலும், முதுமையிலும் சுத்த நீசனும், துஷ்டசுபாவியுமானவன்.

11. இன்னும் அவன் நமது மஹ்பூப் நாயகரை மணமாற புகழ்ந்து வாழ்த்து வதை தவிர்த்து யாதொரு நன்மையும் அவனில் அறவே காணப் படுவதில்லை.

12. ஆகவே அப்புண்ணிய நாயகரால் எனக்கு போதிய உபகாரமாவது மறுமை நாளில் தங்கள் கடைக்கண் ஜாடையினால் தங்கள் ஷபாஅத்தின் தாவட்டத்தில் என்னையும் தொடுத்து விடுவதாகும்.

13. அவ்வாறே எனது தாய், தந்தையர், சந்ததி சகோதரர், பாண்டு வத்தினர்களுக்கும், இன்னும் எனது சுக துக்கங்களில் ஈடுபடும் சகாக்களான சிநேகிதர் எல்லோரையும் மன்றாடி மீட்பதுமாகும்.

14. எங்கள் ஆண்டவனே! இந்த பரக்கத்தான மிஃராஜ் வாழ்த்தையோதும் எங்களுடைய இம்மஜ்லிஸில் உனது ரஹ்மத்தினை மறைவான வாயிலைத்திறந்து வைப்பாயாக!

15. இன்னும் நீயே சகல காரியாதிகளிலும் சர்வாதிகாரம் பெற்ற எங்கள் உத்தம நிர்வாகியாயிருந்தருள். இன்னும் விருப்பு, மருப்பின்றி எல்லா நன்மைகளிலும் எங்கள் சார்பாயிருந்தருள்.

16. இன்னும் உனதுபிரியம் பொருத்தத்திற்குரிய மெஞ்ஞான வழி நடை பழக்க வழக்கத்திலும்

17. ஸாலிஹான நல்அமல்கள்,கலப்பற்ற தவ்பா நன்றி, நலம்,தக்வா,சுக்ரு, ஸப்ரு முதலிய நற்கிரியைகளிலும் உன்னிடம் நல்வரம் கோருகின்றோம்

18. இன்னும் எங்கள் பிசகு, பிழை,குற்றம், குறை ,தவறு, முதலிய சகல பெரிய சிறிய பாவ தோசங்களனைத்தையும் மன்னித்தருளும்படி உன்னை விரும்பி கேட்கின்றோம்

19. இன்னும் உத்ரு உடையான் உத்ரை அங்கீகரித்து சருகுதலை நிவர்த்திப்பவன் பாண்மையாய் எங்கள் மானபங்கத்தை மறைத்தருள்

20. எங்களை குப்ரு, ஷிர்க்கின் மார்க்கத்தைவிட்டும் காப்பாற்றி,



தீனுல் இஸ்லாமென்னும் சன்மார்க்கத்தில் தக்கப்படி பரிபாலித்து பராமரித்தருள்

21. உண்மையான, நேர்மையான நல்ல ஈமானுடன் கஷ்டமற்ற, மணமான சுக ஜீவிய ஜெயமத்திலும் எங்களை தாபரித்தருள்

22. எங்கள் மௌத்திடத்தில் தவ்ஹீதென்னும் ஏகத்துவத்தின் முக்தி மந்திரமாகிய கலிமாவின் பேரில் அழகிய முத்திரையிட்டு, கப்ரின் பித்னாக்களையும்எங்களை விட்டும் அகற்றியருள்

23. எங்கள் ஆண்டவனே! எங்களை ஜஹன்னமென்னும் நரக வேதனையைவிட்டும் காப்பாற்றி, நித்யானந்த சுவனப்பதியின் மணமாளிகையில் புகுவித்தருள்

24. இதோ அல்லாஹ்வின் ரசூல் எங்களின் பொருட்டு மன்றாடு வார்களாக ஏனெனில் நாங்கள் அவர்களை தங்கரியம் கொண்டாடும் பாத்தியம் அவர்களில் எங்களுக்குண்டு

25. ஆகையினால் அவர்களின் திருக்காட்சியை உனது பேரானந்த தீதாருடன் எங்களுக்கு நிச்சய மாக்கியருள் இதுவே எங்கள் பேராசையும் அபிலாஷையும், மேலெண்ணமுமாகும் மற்றவை யெல்லாம் மென்மேலும் ஹைறாயிருக்கும்.

26. இனி உனது திருச்சமூகம் மிஃராஜ் நடத்திவிக்கப்பட்ட நல்லடியாராகிய ஹைரான இந்த நபியவர்கள் மீது ஸலவாத் சொல்வாயாக

27. இன்னுமிந்த ரசூல் நாயகர் மீதும், பரிசுத்த நாயகங்களான புத்திர பவுத்திர, கிளை, கோத்திர, பாதியஸ்த, குடும்பத்தினர் மீதும் ஸலாம் சொல்லியருள்

28 மேலும் அவர்களின் இரு மாமனார், இரு மருகர், மற்றும் நன்மாராயம் பெற்ற பன்மரில் மீதியான அறுவர்கள் மீதும்

29. இன்னும் தீனுல் இஸ்லாமில் அழகிய நட்சத்திரங்கள் போன்ற சங்கைவான்களான சகாக்கள் மீதும் சன்மார்க்க நல்வழியில் அவர்களை பின்பற்றியவர்கள் மீதும்

30. அவ்வாறே எங்கள் மீதும்ஸலவாத்,ஸலாம் உண்டாவதாக! ஆண்டவனே! சகலபுகழுக்கும், நன்றிக்கும் பாத்தியமுடைய உனக்கே எல்லாப் புகழும், துதியும் காலாகாலமும் உனது மகத்துவ திருமுகத்திற்கே சிறப்பாயிருக்கக் கடவது.

## دُعَاءٌ

اَللّٰهُمَّ يَامَنْ مُدَّتْ اِلَيْهِ اَيَادِيْ اَمَانِي الْبَرِيَّةِ
فِيْ كُلِّ الْمُهِمَّاتِ الدِّيْنِيَّةِ وَالدُّنْيَوِيَّةِ وَيَامَنْ يَنْتَهِيْ
اِلَيْهِ اَوْجُهُ الْاٰمَالِ حَيْثُ يَنْقَطِعُ الرَّجَاءُ وَيَامَنْ
اِلَيْهِ الْمُشْتَكٰى وَالْمَفْزَعُ فِي الشِّدَّةِ وَالرَّخَاءِ وَيَا
مَنْ يُجِيْبُ الْمُضْطَرَّ اِذَا دَعَاهُ وَيَامَنْ لَا يَرُدُّ
الْمُسْتَنْجِدَ بِبَابِهٖ عَنْ عَطَائِهٖ وَجَدْوَاهُ، نَسْأَلُكَ
بِفَضْلِ فَيْضِ اَقْدَسِ وُجُوْبِ رَحْمَتِكَ الْاِمْتِنَانِيَّةِ
مِنْ حَضْرَةِ خَزَائِنِ غَيْبِكَ الْقُدْسِيَّةِ وَنَتَوَسَّلُ
بِمُطَهَّرِ جَنَابِ رُوْحِ قُدْسِكَ وَخَازِنِ رَحْمَتِكَ
وَنَدِيْمِ حَضْرَتِكَ وَنَجِيِّ غَيْبِكَ وَخَلِيْفَةِ مَمْلَكَتِكَ
وَعَرُوْسِ مَنَصَّتِكَ سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ
وَسَلَّمَ اَنْ تُصَلِّيَ وَتُسَلِّمَ عَلَيْهِ وَعَلٰى اٰلِهٖ وَاَصْحَابِهِ
الْاَمْجَادِ الْاَنْجَابِ وَحَمَلَةِ شَرِيْعَتِهٖ اِلٰى يَوْمِ الْفَصْلِ
وَالْخِطَابِ وَاَنْ تُوَفِّقَنَا لِاِخْلَاصِ الْقَوْلِ وَالْفِعْلِ



وَالنِّيَّةِ وَتُلْهِمَنَا الْخَيْرَاتِ فِي الْاَحْوَالِ وَالْاَعْمَالِ
الْمَحْمُوْدَةِ الْمَرْضِيَّةِ وَتُخَلِّصَنَا مِنْ اَيَادِي الْاَعَادِيْ
الدِّيْنِيَّةِ وَالدُّنْيَوِيَّةِ، وَتُسَلِّمَنَا مِنْ مَصَائِدِ
مَكَائِدِ النَّفْسَانِيَّةِ وَالشَّيْطَانِيَّةِ، اَللّٰهُمَّ اِنَّا
قَدِ اجْتَمَعْنَا وَقَرَأْنَا اَحَادِيْثَ مِعْرَاجِ نَبِيِّكَ وَاَخْبَارَ
اِسْرَاءِ عَبْدِكَ وَرَسُوْلِكَ، فَاَلْبِسْنَا خِلَعَ الرِّضٰى
وَالْقَبُوْلِ، وَتَوِّجْنَا بِتَاجِ الْعِزَّةِ وَالْكَرَامَةِ
وَالتَّبْجِيْلِ، وَاجْعَلْ مَدَائِحَنَا فِيْهِ بِالنِّظَامِ وَالنِّثَارِ
مِنْ مَثَابَةِ مَثُوْبَاتِ حَسَنَاتِ الصُّلَحَاءِ الْاَخْيَارِ،
وَتَجْمَعَ بَيْنَنَا وَبَيْنَهٗ فِيْ دَارِ الْقَرَارِ اَللّٰهُمَّ اكْتُبْ
لَنَا سَوَابِكَ رَحْمَتِكَ، وَسَوَابِغَ نِعْمَتِكَ، وَنَوَامِيَ
بَرَكَتِكَ، وَافْتَحْ لَنَا اَبْوَابَ جَنَّتِكَ، فِيْ نَدْوَتِنَا
هٰذِهِ الْمُبَارَكَةِ الشَّذِيَّةِ، فَضْلًا لِهٰذَا الْمَلَكِيِّ
الْجَامِعِ الْمُتَرْجِمِ لِهٰذِهِ الْخَصَائِصِ النَّبَوِيَّةِ،
وَالْاَحَادِيْثِ الْمِعْرَاجِيَّةِ، وَلِقُرَّائِهَا، وَسُمَّاعِهَا،

وَحُضَّارِهَا، وَكُتَّابِهَا، وَلِمَنْ اَجْرٰى هٰذَا الْعَمَلَ
الْجَلِيْلَ، وَالْخَيْرَ الْجَزِيْلَ، فِىْ هٰذِهِ اللَّيْلَةِ بِالْكَرَامَةِ
وَالتَّبْجِيْلِ، اَللّٰهُمَّ اجْعَلْ جَمْعَنَا هٰذَا جَمْعًا مَّرْحُوْمًا
وَتَفَرُّقَنَا مِنْ بَعْدِهٖ تَفَرُّقًا مُّبَارَكًا مَّعْصُوْمًا،
وَلَا تَجْعَلْ فِيْنَا وَلَا مِنَّا وَلَا مَعَنَا شَقِيًّا وَّلَا مَطْرُوْدًا
وَّلَا مَحْرُوْمًا، اَللّٰهُمَّ اَصْلِحْ اَحْوَالَنَا، وَاَحْسِنْ
اَعْمَالَنَا، وَبَلِّغْ اٰمَالَنَا، وَلَا تُؤَاخِذْنَا بِقَبِيْحِ
اَفْعَالِنَا، وَلَا تُجَازِنَا بِسُوْءِ اَعْمَالِنَا اَللّٰهُمَّ اغْفِرْ
لَنَا وَارْحَمْنَا، وَلِوَالِدِيْنَا وَلِاَهْلِيْنَا، وَلِاَوْلَادِنَا وَلِاِخْوَانِنَا
وَلِاَشْيَاخِنَا وَلِاَحْبَابِنَا، وَلِجَمِيْعِ الْمُسْلِمِيْنَ بِرَحْمَتِكَ
يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ، وَنَسْئَلُكَ اَللّٰهُمَّ بِحَقِّكَ يَا
رَحْمٰنُ يَا رَحِيْمُ، وَبِحَقِّ نَبِيِّكَ الْكَرِيْمِ، وَبِمَا كَانَ
بَيْنَكَ وَبَيْنَهُ فِىْ حَضْرَةِ الْخَلْوَةِ وَالْجَلْوَةِ مِنَ السِّرِّ
الْقَدِيْمِ، وَالْقُرْبِ الْعَظِيْمِ، وَالْوَصْلِ الْجَسِيْمِ فِىْ
رَفْرَفِ الْاُنْسِ وَالْجَلَالَةِ وَالتَّعْظِيْمِ، اَنْ تُعْتِقَ



رِقَابَنَا وَرِقَابَ اٰبَائِنَا وَاُمَّهَاتِنَا وَجَمِيْعِ الْمُسْلِمِيْنَ
بِاِلٰهِيَّتِكَ مِنَ النَّارِ وَتُدْخِلَنَا الْجَنَّةَ يَا رَبَّ الْعٰلَمِيْنَ،
وَاَنْ تُصَلِّيَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدِكَ الْمُخْتَصِّ بِالْمِعْرَاجِ
وَالْاِسْرَا، وَالْمَخْصُوْصِ بِالْوَحْدَةِ الْكُبْرٰى وَالْمُخَصَّصِ
بِسِرِّ مَقَامِ اَوْ اَدْنٰى، اَلَّذِىْ لَمْ يَصِلْ اِلَيْهِ اَحَدٌ،
وَلَا يُكْشَفُ عَنْهُ بِجِدٍّ وَّلَا جُهْدٍ، وَلَوْ لِوَاحِدٍ مِّنَ
الْاَنْبِيَآءِ وَالْمُرْسَلِيْنَ، وَلَا الرُّوْحَانِيَّةِ
الْمُقَدَّسَةِ وَالْمَلَائِكَةِ الْمُقَرَّبِيْنَ، وَعَلٰى اٰلِهٖ
اَهْلِ الْجُوْدِ وَالْكَرَمِ، وَاَصْحَابِهٖ ذَوِى الصِّدْقِ
وَالْقَدَمِ، وَعَلٰى سَائِرِ اُمَّتِهٖ خَيْرِ الْاُمَمِ وَتُسَلِّمَ
تَسْلِيْمًا كَثِيْرًا دَائِمًا اِلٰى يَوْمِ الدِّيْنِ، وَالْحَمْدُ لِلّٰهِ
رَبِّ الْعٰلَمِيْنَ ۝

# துஆவின் உரை

எங்கள் ஆண்டவனே ! சர்வ சம்பூரண இலட்சங்களுக்குரிய நாயகனே! இகபரலோகத்தின் சகல அத்தியாவசியங்களில் அடியாரின் ஆசா, பாசங்களென்னும் கரங்களை ஏந்தி பிரார்த்திக்கத் தக்க பாத்தியமுடைய நாயனே ! எவர் தம்பமுமுற்று பரிதபிக்கும் நிற்கதியில் ஏழைகளாகிய எங்கள் அபிலாஷைகளென்னும் முகங்கள் முன்னோக்கும் முடிவான இலட்சியமாகிய இறைவனே ! சர்வ சுக, துக்கங்களிலும் எங்கள் முறைப் பாட்டிற்கிரங்கி ஆதரித்து அபயமளிக்கும் அடைக்கலமாகிய வல்லவனே ! கொடிய கஷ்ட, நஷ்ட சங்கடங்களில் சிக்குண்டு கதறியழைப் போர்க்கு நல்உத்தாரம் அளிக்கும் மன்னானே ! உனது வாயிலே கதியென சரணடைவோர்க்கு தடையின்றி, தஞ்சமளித்து தருமக் கொடைக் கொடுத்தாளும் ரஹ்மானே ! நாங்கள் உனது பரிசுத்த அந்தரங்க பொக்கிஷத்த ன் சன்னிதியில் தர்மார்த்த விதியாகிய கருணைக் கடலின் பால் கனிந்தொழுகும் உனது திவ்விய ரஹ்மத்தென்னும் திருவருளை முன்னிட்டு உன்னை வேண்டி நிற்கின்றோம்.

இன்னும் நாங்கள் உனது மகா பரிசுத்த ஆத்மாவும், கிருபை பொக்கிஷப் பதியும் திருச்சமூக சகாவும், அந்தரங்க இரட்சகரும், தோத்திய அரசாங்க இஸ்தானிகரும், மணவறை மாப்பிள்ளையுமாகிய எங்கள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லப் அவர்களைக் கொண்டு உன்னிடம் சிபாரிசு தேடுகிறோம். நீ அம்மகிமைக்குரிய மகான் மீதும், அவர்களின் கவுரவமிக்க புண்ணிய ஆத்மாக்களாகிய இனமித்திர சகாக்கள் மீதும் இன்னும் நீதி, விசாரணை நாள் பரியந்தம் அவர்களின் சன்மார்க்க பொறுப்பேற்ற பாரவாங்களாகிய வலிமார், குத்புமார் நல்லவர்கள் மீதும் உனது திருக்கருணை ஈடேற்றம் பாலித்தருள்வாயாக !

ஆண்டவனே ! இன்னுமெங்கள் மனோவாக்கு காயங்களாகிய திரிகரணங்களும், பரிசுத்தமடையும் பொருட்டு நல்வரம் தந்தருள். எங்கள் சகல காரியாம்சங்களிலும் உனது பொருத்தம் புகழுக்குரிய நன்மைகளை எங்களுக்கு நல்லுதிப்பாக்கியருள். எங்கள் வைதீக, லௌகீக சத்துருக்களின் கைகள் மேலோங்கா வண்ணம் எங்களை



தற்காத்தருள் கொடிய கொடு, மனோ மமதை, அகங்கார முதலிய துஷ்ட ஷைத்தான்களின் மாய கபட வலைக்குள் மாட்டி மடிந்து போகாமல் எங்களை இரட்சித்து காப்பாற்றியருள்.

ஆண்டவனே ! நாங்கள் உனது திருநபிகள் நாயகரின் அருள் வாய்மைகளென்னும் வின்னோதய ஆகமங்களையும், உனது நல்லடிமை தூதரின் சரித்திரங்களையும் ஓதி வாழ்த்தினோம். ஆகையால் உனது கபூல் பொருத்தமென்னும் பரிவட்டங்களை எங்களுக்கு போர்த்தியருள். சங்கை சிறப்பு மகத்துவமென்னும் கிரீடத்தை எங்களுக்குச் சூட்டியருள். இன்னுமவர்களின் புகழாகிய இந்த கோவைகளையும், வசனங்களையும் நல்லோர்கள், சாலிஹீன்களின் நல்வணக்கங்களின் ஸ்தானங்களில் ஆக்கி வைத்தருள். இன்னும் நித்தியானந்த நற்சுக வாழ்வில் தரிப்பான சுவனப் பதியில் எங்களையும், அவர்களோடு சேகரமாக்கியருள்.

எங்கள் ஆண்டவனே ! உனது முதன்மையான நற் கருணையையும், சம்பூரணமான சௌபாக்கியத்தையும், மிகுதியான சம்பத்தையும், எங்களுக்கு கற்பித்தருள். உனது சுவனலோகத்தின் திருவாயிலை மணமான, சிறப்பான இந்தக் கோவை ஓதும் தரும சபைக்கு நேரால் திறந்து வைத்தருள்.

முக்கியமாக எங்கள் நபி நாயகரின் சிறப்பான இவ்வின்னோதய வரலாற்றை கோவை செய்து, மொழிபெயர்த்த மல்கரீ என்னும் இச்சிற்றடியேனுக்கும் இதையோதுவார், கேட்போர், சமூகமானோர், எழுதி வைத்தோர், இன்னுமிந்த கண்ணியமிக்க சங்கையான மிஃராஜின் இரவில் இவ்வருமையும், பெருமையும் வாய்ந்த மகத்தான நல் வணக்கத்தைக் கொண்டாடி சிறப்பிப்போர் முதலிய சகலருக்கும், உனது நல்லருள் கருணை பாலிப்பாயாக !

எங்கள் ஆண்டவனே ! எங்களின் இக்கூட்டத்தை கிருபைக்குரிய கூட்டமாகவும், எங்கள் பிரிவை சுபிட்சமான பாதுகாக்கப்பட்ட பிரிவாகவும் ஆக்கியருள். இன்னும் எங்களிலோ, எங்களிலிருந்தோ எங்களுடனோ, யாதொரு முனிவு பெற்றவனையாவது, பாக்கியமற்றவனையாவது, நற்பேற் கெட்டவனையாவது, ஆக்காதிருப்பாயாக !

ஆண்டவனே ! எங்கள் சுபாவக் குணங்களை திருத்தமாக்கியும், கிரியைகளை அழகாக்கியும், அபீட்ஷைகளை சித்தியாக்கியும்

அருள்வாயாக! எங்கள் துற்திருத்தியங்களால் எங்களை குற்றம் பிடியாதே ! அதிக்கிரமங்களால் தண்டியாதே !

ஆண்டவனே ! கிருபையாளரில் மகா கிருபையாளனே ! உனது கிருபா கடாட்சத்தால் எங்களுக்கும், எங்கள் மாதா, பிதா, மனைவி, மக்கள், சகோதரர், தீட்சதகுருமார், இஷ்டமித்திரர் முதலிய, சகல முஸ்லிம், முஃமின்களுக்கும் பிழைப் பொறுத்து கிருபை செய்தருள்வாயாக !

ஆண்டவனே ! சர்வதயாளனே ! உத்தம கிருபையாளனே ! சர்வலோக இரட்சகனே ! நாங்கள் உனது உண்மையைக் கொண்டும், உனது சங்கையான திருநபியின் உண்மையைக் கொண்டும், இன்னும் இரகசிய, பராசியத்தில் மகிமை மிக்க மருவுதலென்னும் பசிய பஞ்சனையின் மீது, உனக்கும், அவர்களுக்குமுரிய அருமையும், பெருமையும் அதிசிலாக்கியமும், வெகுயோக்கியமுமான, சாமீப, சாயுட்சய சமூகத்தின் பூர்வீக, அகமியங்களைக் கொண்டும், உன்னை கெஞ்சிக் கேட்கிறோம். உனது மகத்தான தெய்வீக சத்துவத்தினால் எங்களுடையவும், எங்கள் மாதா, பிதாக்களுடையவும் மற்றும் முஸ்லிம்களுடையவும், கழுத்துகளில் நின்றும் கொடிய நரகத்தின் அடிமைத் தனமென்னும் பந்தக் கட்டை அவிழ்த்து, உரிமைப் பட்டயமளித்து, நித்தியானந்த சுகம் பெற்று வாழும் மோட்சப்பதியில் எங்களைப் புகுதுவித்து ஆசீர்வதித்தருள்வாயாக!

ஆண்டவனே ! உனது ஹபீபாகிய முஹம்மதென்னும் திருநாமம் தரித்தவரும், சிறப்பான மிஃராஜின் சிரேஷ்டரும் மகோன்னத ஏகாந்த பதவியாகிய "வஹ்தத்துல் குப்ரா"வின் சொந்தக் காரரும், இன்னும் நபிமார், ரசூல்மார், பரிசுத்த சமூக ஆசிரமத்தின் ஆன்மீக அமரர்களில் எவரேனும் முக்தி பெறவோ தெண்டிப்பாலும், உழைப்பாலும், ஒருவருக்கும் சித்தியாகவோ, கூட்டாததுமான "காப கவ்ஸைனி அவ் அத்னா" வெனும் சாமீப சமூகப் பதவியின் அந்தரங்கப்பிரதான புருஷருமாகிய எங்கள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீதும், தங்கள் தருமக்குண சீலர்களாகிய வமிசப் பரம்பரையினர் மீதும், உண்மை பக்த சிரோன்மணிகளான சகாக்கள் மீதும், மற்றும் அவர்களின் சமூக சமேதரர் மீதும், உலக நிலையநாள் பரியந்தம் தரிபாடான, மிகுதியான ஸலவாத்து, ஸலாமென்னும் திருக்கருணை ஈடேற்றம் சொல்லியருள் வாயாக!



إِلٰهِيْ قَدْ خَتَمْنَا ذِكْرَ شَيْئٍ … بِمِعْرَاجِ النَّبِيِّ وَيَا إِلٰهِيْ
إِلٰهِيْ فَاقْبَلَنْ مِنَّا بِحُسْنٍ … قَبُوْلًا ثُمَّ إِقْبَالًا إِلٰهِيْ
إِلٰهِيْ وَاعْفُ عَنَّا وَارْحَمَنَّا … وَجُدْ وَالْطُفْ بِفَضْلِكَ يَا إِلٰهِيْ
إِلٰهِيْ وَارْزُقَنَّا مِنْ حَلَالٍ … وَجَنِّبْنَا الْحَرَامَ وَيَا إِلٰهِيْ
إِلٰهِيْ وَاقْضِ عَنَّا كُلَّ دَيْنٍ … وَتَبِعَاتِ الْحُقُوْقِ وَيَا إِلٰهِيْ
إِلٰهِيْ عَافِنَا مِنْ شَرِّ قَحْطٍ … وَجَذْبٍ وَّالْغَلَاءِ وَيَا إِلٰهِيْ
إِلٰهِيْ ادْفَعْ بَلَاءً مِّنْ وَبَاءٍ … وَطَعْنٍ ثُمَّ طَاعُوْنٍ إِلٰهِيْ
إِلٰهِيْ أَمْطِرَنْ مَطَرًا غَزِيْرًا … بِإِرْخَاصِ الْبِلَادِ وَيَا إِلٰهِيْ
إِلٰهِيْ اكْتُبْ لَنَا خَيْرًا كَثِيْرًا … بِرَحْمَتِكَ الْوَسِيْعَةِ يَا إِلٰهِيْ
إِلٰهِيْ صَلِّيَنْ طُوْلَ الدَّوَامِ … عَلٰى مِسْكِ الْخِتَامِ وَيَا إِلٰهِيْ
إِلٰهِيْ وَارْضَ عَنْ اٰلٍ وَّصَحْبٍ … وَكُلِّ الْمُسْلِمِيْنَ وَيَا إِلٰهِيْ

قد طبع هذا الكتاب المستطاب
فهيمية پبلشرس
خانقاه فهيمية
چنئ

# 25. பைத்தின் உரை

1. ஆண்டவனே! நாங்கள் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திரு மிஃராஜ் கிஸ்ஸாவில் சிலதை ஓதி முடித்தோம்.

2. ஆண்டவனே! நீ உனது அழகிய திருக்கருணையினால் முன் வந்து எங்கள் இர்த நல்வாழ்த்தை கபூல் செய்வாயாக !

3. ஆண்டவனே! உனது திருஅருளினால் எங்களை பற்றி மன்னித்து, கிருபை செய்திறங்கி நன் கொடையருள்வாயாக!

4. ஆண்டவனே! அசுத்த ஹராமை தவிர்த்து சுத்த ஹலாலான ரிஜ்க்கை எங்களுக்கு உணவளித்தருள்வாயாக

5. ஆண்டவனே ! எங்களைப் பற்றிய பிறர் தொடர்ச்சி முதலிய சகல கடன்கட்டுகளையும் நிவர்த்தித் தருள்வாயாக !

6. ஆண்டவனே ! எங்களை விட்டும் பஞ்சம் வரம், அதிவிலை வாசி முதலிய காலக்குரூர தீங்கை அகற்றி நற்சுக வாழ்வைத் தந்தருள்வாயாக !

7. ஆண்டவனே ! கொடிய வபா, தஃனு, தாவூனு முதலிய எல்லா முஸீபத்துக்களையும் விட்டு தவிர்த்தருள் வாயாக !

8. ஆண்டவனே ! எங்கள் நாடு, நகர்வளம் செழித்தோங்கி, சுகித்து வாழ போதிய கனமழையைப் பொழியச் செய்தருள்வாயாக

9. ஆண்டவனே ! உனது ரஹ்மத்தென்னும் அதிவிசால கருணையினால் மிகுதமான நல் சுபிட்சங்களை எங்களுக்கு கற்பித்தருள்வாயாக !

10. ஆண்டவனே ! எங்கள் நாயகராகிய கஸ்தூரி முத்திரை தரித்த முஸ்தபா நபியவர்கள் மீது நீடூழி காலம் ஸலவாத்து, ஸலாம் சொல்லியருள்வாயாக !

11. ஆண்டவனே ! இன்னும் அவர்களின் கிளை, கோத்திர, சினேக சகாக்கள் மீதும், மற்றும் எல்லா சமூக முஸ்லிம்கள், முஃமின்களுக்கும் உனது திருவருட் பொருத்தத்தை தந்தருள்புரிவாயாக !




Printed by Fahimiya Publishers 9841567213